விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 098 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 13 வியாழக்கிழமை (27.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

### தடுத்து நிறுத்திய பொலிஸார்



06ஆம் பக்கம் பார்க்க

## இழுவலைகளை படிப்படியாக நிறுத்த முடியும் மீனவர்கள் பிரச்சினையைப் பேசித் தீர்ப்போம்

### இராமேஸ்வர விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் ஜேசுராஜா

(வவுனியா)

இழுவலைகளை படிப்படியாக நிறுத்த முடியும். இந்திய - இலங்கை மீனவர்கள் தொப்புள் கொடி உறவாக மீன் பிடிக்க இரு நாட்டு அரசாங்கமும் பேசித் தீர்வு காண வேண்டும் என இந்திய இராமேஸ்வரம் மாவட்டத்தின் விசைப்படகு மீனவ சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இந்திய - இலங்கை மீனவ சங்கப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தையின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக இருந்து வரும் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

15ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில்

# பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கே பயணத் தடை

## பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கே முன்னாள் இராணுவப் பிரதானிகள் உட்பட நால்வர் மீது பயணத் தடை விதிக்கப்பட்டதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### வேலணையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்கும்போது மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஏரம்பு தட்சணாமூர்த்தி (வயது-75) என்பவரே உயிரிழந்தவரா வார்.

15ஆம் பக்கம் பார்க்க

## வாகனம் மோதியதில் குடும்பப் பெண் உயிரிழப்பு

### மகளை அழைத்துச் சென்றபோது முழங்காவிலில் துயரம்

(கிளிநொச்சி)

மகேந்திரா வாகனம் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முழங்காவிலில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மகளை வீட்டுக்கு அழைத்துக்

15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது அபிவிருத்தியை உரிய காலத்துக்குள் செய்யுங்கள்

### பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலப் பகுதிக்குள் நிறைவு செய்யுங்கள் எனப் பிரதி அமைச்

02ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாயில் சடலம் மீட்பு

### அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இனந்தெரியாத நபரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

15ஆம் பக்கம் பார்க்க

அன்பு ஜவஹர்சா எழுதும்



### அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு

10ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டு நல்லிணக்க செயல்முறையை பிரித்தானியாவின் தடை பாதிக்கும்

### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதிகள் உட்பட நால்வருக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்தமையானது இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க செயல்முறையை பாதிக்கும் என ளெிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டின் முன்னாள் மூன்று இராணுவப் பிரதானிகள் உட்பட நான்கு பேர் மீது ஐக்கிய இராச்சியம் விதித்துள்ள தடைகள் தொடர்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்...

முன்னாள் இராணுவத் தளபதிகளான ஜெனரல் சவேந்திர சில்வா, ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் அம்பாறை-மட்டக்களப்பு தளபதி விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

இதுகுறித்து கருத்துவெளியிட்டுள்ள வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான செயலாளர் டேவிட் லாம்மி,

ஜூலை 2024 பொதுத் தேர்தலில் தொழிலாளர் தேர்தல் பிரசாரத்தின் போது இலங்கையின் யுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார்கள் என வாக்குறுதி அளித்திருந்தது. அவ் வாக்குறுதியே தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த முடிவு கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறப்படுவதை உறுதி செய்வதாக அமையும்.

இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்ட இங்கிலாந்து அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறப்படுவதை இந்த முடிவு உறுதி செய்கிறது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற இங்கிலாந்து அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதுடன் தேசிய ஒற்றுமைக்கான அவர்களின் உறுதிப்பாடுகளை வரவேற்கிறத்து என்றார். (ம-7)

## முல்லைத்தீவுக்கு...

சர் உபாலி சமரசிங்க அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமையுரையாற்றிய பிரதி அமைச்சர், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவுசெய்யுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்தார்.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்க்கப்பட்ட பிரச்சினைகள், தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற பிரச்சினைகள் நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

வீதிகள் தொடர்பான விடயங்களும், கனிய மணல் அகழ்வு தொடர்பான விவகாரங்களும், போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகளும் கூடுதலாக இதன்போது ஆராயப்பட்டன.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கடைகளின் வைப்புப் பணத்தொகை அதிகமாகவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்ட போது அதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே பிரதேச சபைகள் உள்ளன என்றும், அதிகளவு தொகையை அறவிடுவது பொருத்தமற்றது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இது தொடர்பில் பல தடவைகள் தான் தெரிவித்துள்ளதாகவும், இவ்வாறு பெற்றுக்கொள்ளும் பணத்தில் மக்களுக்கு அபிவிருத்தியும் செய்வதில்லை எனவும் சபைகளின் நிரந்த வைப்பிலே இடப்படுகின்றன என்றும் ஆளுநர் விசனம் வெளியிட்டார்.

இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள், நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள், அனுமதி பெறவேண்டிய திட்டங்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்துக்கும் உரிய அனுமதிகள் ஒருங்கிணைப்புக் குழுவால் வழங்கப்பட்டது.

விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இறுதியாக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

சட்டவிரோதமாக கசிப்புக் காய்ச்சும் நடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக முன்னெடுக்கப்படுவதாகவும் 239பேரை இதுவரை அடையாளம் கண்டுள்ளதாகவும் மாவட்டச் செயலர் ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்தார். பொலிஸாரின் ஒத்துழைப்பை அவர் கோரினார்.

கூட்டத்தில் வட்டுவாகல் பாலம் எவ்வாறு திருத்தப்படவுள்ளது என்பது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் மாவட்டத்தில் நிலவும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், கடற்றொழில் தொடர்பில் தனியான கலந்துரையாடல் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

### ஆத்திசூடி பிள்ளையார் ஆலயத்தில்
## ஒளவையார் விழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆத்திசூடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று(27) ஒளவையார் விழாவை முன்னிட்டு முற்பகல் 10.30 மணியளவில் ஸ்நபன அபிசேகம், விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். (ம-7)


## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



எமது கலாமன்றத்தில் வருடாந்தம் நடைபெற்று வருகின்ற திருவெம்பாவை 6 ஆம் நாள் நிகழ்வாகிய தெய்வீக கலையரங்கு நிகழ்வில் வேதபாராயணம் ஆற்றிவருகின்ற அந்தணர் சிவாச்சாரியார்களை வளர்த்தெடுத்து வருகின்ற தர்ம சாஸ்தா குருகுல அதிபர்

**சிவஸ்ரீ தானு. மஹாதேவக் குருக்கள்**

அவர்களின் பிரிவுத் துயர் அறிந்து அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத் தில்லைக் கூத்தன் திருவடிகளில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ் கிளை

(C-2554)



## NEW SCIENCE WORLD
### கணித விஞ்ஞானப் பிரிவுகள்
### A/L 2027 Batch
### Tamil And English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் Zoom இன் ஊடான வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் | : திரு.R.குமரன்<br>திரு.R.குகன் |
| இரசாயனவியல் | : டயஸ்<br>திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | : திரு.N.T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | : திரு.S.S.செந்தில்ராஜ்<br>திரு.V.ஹரிகரன் |
| ICT | : திரு.T.லவேந்திரன் |

ஆரம்பம் : 09.04.2025 (புதன்கிழமை)
நேரம் : 9.15Am

அனுமதிகளை 01.04.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு :
021 221 6690, 077 336 4055

NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna.

(C-2548)



## Vacancies

Office Admin, Accounts Clerk, Marketing Executive, Marketing Manager
(Basic: 50,000/= - 90,000/=)
CONTACT
077 996 9661

(3762)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127



## இதய அஞ்சலி



இலங்கை தர்மசாஸ்தா குருகுல அதிபரும் வேதசிவாகம ஞான பாஸ்கரனும் எமது ஆத்மார்த்த குருவுமாகிய

**சிவஸ்ரீ தானு. மஹாதேவ சிவாசார்யார்**

அவர்கள் சிவலோகப் பிராப்தி அடைந்ததையிட்டு எம்மை பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பொலிகண்டி கந்தவனக் கடவை சண்முகப் பெருமானின் பாதாரவிந்தங்களையும் மருதாம்புலம் பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களையும் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கந்தவனக்கோவிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(3761)

பிரதமகுரு
ச.வைத்தியநாதர் குருக்கள் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சந்தைகளில்

# 10 இற்கு 1 விகித கழிவு முறை

# விவசாயிகளைப் பாதிக்கிறது

## இது முற்றாக நிறுத்தப்படும்-அமைச்சர் உறுதி


(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்திற்குட்பட்ட மரக்கறிச் சந்தைகளின் 10 இற்கு 1 விகித கழிவு வழங்கும் நடைமுறை அரச சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் அல்ல என உள்ளூராட்சி திணைக்கள அதிகாரியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விலேயே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் இருக்கும் சந்தைகளில் விவசாயிகளினால் விற்பனைக்குக் கொண்டு வரும் விளைபொருட்களை 10 இற்கு 1 விகித கழிவில் சந்தை குத்தகையாளர்கள் பெற்றுக் கொள்கின்றமை விவசாயிகளுக்கு அநீதி இழைக்கும் செயல் என பாராளுமன்ற உறுப்பினர்களான இ.அர்ச்சுனா மற்றும் இளங்குமரன் ஆகியோரினால் சுட்டிக்காட்டியதற்கு பதில் வழங்கும் போதே உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாம் வடமாகாண ரீதியில் பல நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும் 10 இற்கு 1 விகித கழிவு முறையை தடுத்துநிறுத்த முடியவில்லை.

இதன்மூலம் நாம் பல்தரப்பட்ட இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என அந்த அதிகாரி தெரிவித்த கருத்தை ஆமோதித்த கடற்றொழில் அமைச்சர், சந்தைகளில் "சண்டித்தன கலாசாரம் உண்டு" அப்படித்தானே என அந்த அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு ஆம் அதுதான் உண்மை என உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி அமைச்சரின் கருத்தை ஆமோதித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த தேசிய மக்கள் சக்தி அரசு கரிசனை கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் விவசாயிகளைப் பாதிக்கும் இந்த 10 இற்கு 1 என்ற கழிவு முறை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சந்திரசேகர் உறுதிபடத் தெரிவித்தார். (க-நி-6-8)

# கச்சதீவு மீட்பு வழக்கு செப்.15 இறுதி விசாரணை

## ஒத்திவைத்தது இந்திய உயர் நீதிமன்றம்

(டில்லி)

கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது செல்லாது என அறிவிக்கக் கோரி இந்திய உயர் நீதிமன்றத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி உள்ளிட்டோர் தொடர்ந்த வழக்கின் இறுதி விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கருணாநிதி மறைந்து விட்டதால் அவருக்குப் பதிலாக திமுக பொருளாளர் டி.ஆர் பாலுவை மனுதாரராக சேர்க்கவும் உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அனுமதித்தது.

தமிழ்நாட்டுக்கு சொந்தமானது கச்சதீவு. இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் வசம் இருந்தது கச்சதீவு. ஆனால் மத்திய அரசு 1974 ஆம் ஆண்டு இலங்கைக்கு தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சதீவை தாரைவார்த்தது.

கச்சதீவு தாரைவார்க்கபட்டதால் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கச்சதீவு அருகே மீன்பிடிக்க உரிமை இருந்த போதும் எல்லை தாண்டிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி தற்போதும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்து வருகிறது.

இதனால் கச்சதீவை மீட்க வேண்டும் என்பது தமிழ்நாட்டின் நெடுநாள் முழக்கம்.

தமிழ்நாட்டு சட்டசபையிலும் கச்சதீவை மீட்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மறைந்த முதல்வர்கள் ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோர் கச்சதீவு மீட்புக்காக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இறுதியாக விசாரிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த போது ஜெயலலிதா காலமானார். இதனால் அவரது வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

அதேபோல கருணாநிதி மறைந்த நிலையில் அவருக்கு பதில் தி.மு.க பொருளாளர் டிஆர் பாலு தம்மை மனுதாரராக சேர்க்கக் கோரியிருந்தார்.

இந்த நிலையில் உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் கச்சதீவு வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்த விசாரணையின் போது கருணாநிதிக்கு பதில் டி.ஆர் பாலுவை மனுதாரர்களில் ஒருவராக சேர்க்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் கச்சதீவு மீட்புத் தொடர்பான இந்த வழக்கின் இறுதி விசாரணை செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (நி-8)

### *ஜனாதிபதி மாளிகை விடுவிப்பு*

# திட்ட முன்மொழிவு எதுவும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை

## நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை விடுவிப்பு தொடர்பில் பொருத்தமான திட்ட முன்மொழிவு எதுவும் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலிலேயே மேற்கண்ட தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 31 ஆம் திகதி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை தனியாருக்கு வழங்கப்படவில்லை. பொதுமக்களுக்குரிய சொத்து. பொதுமக்களின் சொத்தை பொது மக்களுக்கு வழங்குவதே அரசின் கடமையாகும்.

எனவே ஜனாதிபதி மாளிகை பொது மக்கள் பாவனைக்கு வழங்கப் பொருத்தமான திட்டமொன்றை முன்வைத்தால் உடன் அம்மாளிகை விடுவிக்கப்படும் என உறுதிபடத் தெரிவித்தார்.

இருப்பினும் குறித்த ஜனாதிபதி மாளிகை தொடர்பான திட்டம் எதனையும் இதுவரை எவரும் முன்வைக்கவில்லை என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-நி-6-8)

# இ.போ.ச வுக்கு 20 பேருந்துகள்

## அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்ட பொதுப் போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 20 பேருந்துகள் வழங்கப்படவுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் போக்குவரத்து அமைச்சருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே மேற்படி பேருந்துகள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த மாதம் 10 பேருந்துகளையும் எதிர்வரும் மே மாதம் 10 பேருந்துகளையும் வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கவுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-நி-6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘கிங்ஸ்டன்’ குயின்ரன்

## கொல்கத்தாவுக்கு முதல் வெற்றியை ஈட்டித் தந்த பெருமகன்

## ராஜஸ்தான் மீண்டும் ஏமாற்றம்



குயின்ரன் டி கொக் அரைச்சதம் கடந்து கைகொடுக்க கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி, முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

அசாமின் கவுகாத்தியில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் ராஜஸ்தான், "நடப்பு சாம்பியன்" கொல்கத்தா அணிகள் மோதின.

கொல்கத்தா "லெவன்" அணியில் சுனில் நரைனுக்கு பதிலாக மொயீன் அலி தேர்வானார். ராஜஸ்தான் "லெவன்" அணியில் பசல்ஹக் பரூக்கி நீக்கப்பட்டு வனிந்து ஹசரங்க இடம் பெற்றார். "டாஸ்" வென்ற கோல்கட்டா அணி "பந்துவீச்சை" தேர்வு செய்தது.

**"சுழல்" ஜாலம்:**

ராஜஸ்தான் அணிக்கு சஞ்சு சாம்சன் (13) ஏமாற்றினார். ஸ்பென்சர் ஜான்சன் வீசிய 3வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார் யாஷஸ்வி ஜெய்ஸ்வால். ஹர்ஷித் ராணா, வைபவ் அரோரா பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்ட கேப்டன் ரியான் பராக் (25), வருண் சக்கரவர்த்தி "சுழலில்" சிக்கினார். மொயீன் அலி பந்தில் ஜெய்ஸ்வால் (29) ஆட்டமிழந்தார். வனிந்து ஹசரங்க (4), நிதிஷ் ராணா (8) நிலைக்கவில்லை.

பொறுப்பாக ஆடிய துருவ் ஜூரெல், ஹர்ஷித் ராணா வீசிய 14, 17வது ஓவரில் தலா 2 பவுண்டரி விரட்டினார். "இம்பாக்ட்" வீரர் சுபம் துபே (9) சோபிக்கவில்லை. ஹர்ஷித் "வேகத்தில்" ஜூரெல் (33) போல்டானார். ஷிம்ரன் ஹெட்மயர் (7) நிலைக்கவில்லை. ஹர்ஷித், ஜோன்சன் பந்தில் தலா ஒரு சிக்சர் அடித்த ஜோப்ரா ஆர்ச்சர் (16) ஆறுதல் கொடுத்தார்.

ராஜஸ்தான் அணி 20 ஓவரில், 9 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்கள் எடுத்தது. மகேஷ் தீக் ஷனா (1), துஷார் தேஷ்பாண்டே (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**குயின்ரன் அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு மொயீன் அலி, குயின்ரன் டி காக் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய 3வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய குயின்ரன், மகேஷ் தீக் ஷனா பந்தில் ஒரு சிக்சர் அடித்தார். தொடர்ந்து அசத்திய குயின்ரன், ரியான் பராக், சந்தீப் சர்மா பந்தில் தலா ஒரு பவுண்டரி விரட்டினார். முதல் விக்கெட்டுக்கு 41 ரன் சேர்த்த போது மொயீன் (5) "ரன் அவுட்" ஆனார்.

வனிந்து ஹசரங்கா பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய கேப்டன் ரஹானே, தீக்ஷனா பந்தில் ஒரு சிக்சர் அடித்தார். ஹசரங்கா "சுழலில்" ரஹானே (18) சிக்கினார். ஹசரங்க பந்தில் சிக்சர் விளாசிய குயின்ரன், 36 பந்தில் அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய குயின்ரன், ரியான் பராக் பந்தில் ஒரு சிக்சர் அடித்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த ரகுவன்ஷி, ஹசரங்க, நிதிஷ் ராணா பந்தில் தலா ஒரு பவுண்டரி விரட்டினார். ஆர்ச்சர் வீசிய 18 வது ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் விளாசிய குயின்ரன், கொல்கத்தாவின் முதல் வெற்றியை உறுதி செய்தார்.

கொல்கத்தா அணி 17.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. குயின்ரன் (97* ஓட்., 6 சிக்சர், 8 பவுண்டரி), ரகுவன்ஷி (22*) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை குயின்ரன் டி கொக் வென்றார். கொல்கத்தா அணி, நடப்பு சீசனில் முதல் வெற்றியை பதிவு செய்தது. ஏற்கெனவே ஹைதராபாத் அணியிடம் வீழ்ந்த ராஜஸ்தான், தொடர்ந்து 2ஆவது தோல்வியைச் சந்தித்தது.

(ம-7)

## ஐ.பி.எல் செய்தித் துளிகள்...

### சர்ச்சையில் சிக்கிய 2 வீரர்கள்?

சி.எஸ்.கே அணி பந்து வீசும்போது வேகப்பந்து வீச்சாளர் கலில் அகமது மற்றும் கப்டன் ருதுராஜ் கெய்க்வாட் இணைந்து பந்தை சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மும்பை இந்தியன்ஸ் அணியும் சி.எஸ்.கே அணியும் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில் மோதிய நிலையில் அப்போட்டியில் சென்னை அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆண்டு சென்னை அணிக்காக விளையாடி வரும் கலீல் அகமத், பவர் பிளேவின் போது சிறப்பாக பந்து வீசினார்.

போட்டி தொடங்கிய போது பந்து வீசத் தயாரான கலீல் அகமதிடம் ருதுராஜ் ஓடிவந்து எதோ வழங்குகிறார். அதனை வாங்கிக் கொண்ட கலீலும் இரண்டு விநாடிகளில் திருப்பிக் கொடுக்கிறார். அதனை ருதுராஜ் வாங்கிக் கொண்டு தனது பேண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு சென்றார்.

இது தொடர்பான வீடியோ பரவிவரும் நிலையில், சி.எஸ்.கே ஆதரவாளர்கள் ருதுராஜ் - கலீலின் மோதிரத்தை வாங்கியதாகவும், எதிர்ப்பாளர்கள் பந்தைச் சேதப்படுத்தி சி.எஸ்.கே ஏமாற்றி வென்றதாகக் கூறி இணையத்தில் இரு அணி ரசிகர்களும் விவாதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(6-8)

## டிக்கெட்டுக்களுக்கு கிராக்கி

### அதிருப்தியில் ரசிகர்கள்

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நாளை நடைபெறும் போட்டியில் சி.எஸ்.கே - பெங்களூர் அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில், இந்தப் போட்டிக்கான டிக்கெட் விற்பனை நேற்று முன்தினம் காலை 10.15 மணிக்கு சி.எஸ்.கேவின் அதிகாரபூர்வ வலைத்தளமான www. chennaisuper kings.com என்ற வலைத்தளத்தில் தொடங்கியது.

38 ஆயிரம் இருக்கைகள் கொண்ட சேப்பாக்கம் மைதானத்துக்கான டிக்கெட் வரிசை 3.7 இலட்சத்துக்கும் அதிகமாக காணப்பட்டதால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற சி.எஸ்.கே - மும்பை அணிகளுக்கு இடையேயான போட்டிக்கான டிக்கெட் விற்பனை செய்யப்பட்டபோதும் இலட்சக் கணக்கானோர் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தனர்.

அதுமட்டுமின்றி அதிகாரபூர்வ டிக்கெட் தொகை ரூ.1,700 முதல் ரூ.7,500 வரை விற்பனை செய்யப்படும் நிலையில், பல்வேறு சட்டத்துக்கு புறம்பான தளங்களிலும் கள்ளச் சந்தையிலும் டிக்கெட்டுகள் விற்கப்படுவதாக ரசிகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(6-8)

## பிபா உலகக்கோப்பை கால்பந்து தொடருக்கு ஆர்ஜென்டினா தகுதி

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடருக்கு ஆர்ஜென்டினா அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற உருகுவே உடனான ஆட்டத்தின் போது பொலிவியா 0-0 என சமன் செய்த காரணத்தால் ஆர்ஜென்டினா தகுதி பெற்றிருந்த நிலையில் நேற்று தகுதி சுற்றில் பிரேசில் அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஆட்டம் தொடங்கியது முதலே ஆர்ஜென்டினா ஆதிக்கம் செலுத்தியது. ஆறாவது நிமிடத்தில் ஜூலியன் அல்வாரெஸ் முதல் கோலைப் பதிவு செய்தார். 12 ஆவது நிமிடத்தில் பெர்னாண்டஸ் தன் அணிக்காக இரண்டாவது கோலைப் பதிவு செய்தார்.

பிரேசில் அணி 26 ஆவது நிமிடத்தில் கோல் பதிவு செய்தது. இருப்பினும் 37 மற்றும் 71 ஆவது நிமிடத்தில் மேலும் இரண்டு கோல்களை ஆர்ஜென்டினா பதிவு செய்தது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா வீரர்களின் செயற்பாடு அபாரமாக இருந்தது.

தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு அணிகளுக்கான தகுதிச் சுற்றில் இருந்து தற்போது ஆர்ஜென்டினா மட்டுமே தகுதி பெற்றுள்ளது. மொத்தம் 10 அணிகள் இதில் பங்கேற்றுள்ளனர். புள்ளிப்பட்டியலில் ஈக்குவேடார், உருகுவே, பிரேசில், பராகுவே, கொலம்பியா ஆகிய அணிகள் உள்ளன.

நேரடியாக ஆறு அணிகள் இந்தப் பிரிவில் இருந்து உலகக் கோப்பை தொடருக்கு தகுதி பெறும். 2026 உலகக் கோப்பை கால்பந்து தொடர் கனடா, மெக்சிக்கோ மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

மொத்தம் 48 அணிகள் இதில் பங்கேற்கவுள்ளன. 16 நகரங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

(6-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சார்ஜன் சுவாமிகளின் குருபூசை இன்று



யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடத்தின் இரண்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத்சார்ஜன் சுவாமிகளின் வருடக் குருபூசை 27.03.2025 வியாழக்கிழமை இன்றாகும்.

சார்ஜன் சுவாமிகள் வடமராட்சியில் தும்பளை என்ற கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவருடைய இயற்பெயர் சின்னத்தம்பி. இவர் யாழ்ப்பாண நீதிமன்றில் சார்ஜனாகக் கடமையாற்றினார். தொழில் காரணமாக இவர் தமது குடும்பத்துடன் கந்தர்மடத்திலுள்ள கந்தபுராண வீதியில் வசித்து வந்தார்.

இக் காலத்தில் இந்தியாவில் நீதிபதியாகக் கடமையாற்றிய கடையிற் சுவாமிகள் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்க வேண்டிய நிலை ஏற்படவே, ஒரு மனிதனுக்கு மரணதண்டனை விதிப்பதற்கு "நான் யார்" என்று கூறித் தனது வேலையில் இருந்து பணி நீங்கினார்.

மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சார்ய பீடத்தின் 32 ஆவது தலைவராக இருந்த ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகளைக் குருவாக ஏற்றுத் தீட்சை பெற்றார். துறவியாக வாழ்ந்து வரும் போது, ஊர்காவற்றுறைத் துறைமுகத்தினூடாக யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணத்தை அண்மித்த பெரியகடை என்று அழைக்கப்பட்ட பகுதியில் சுற்றித் திரிந்து பல சித்துக்களைச் செய்ததுடன் பலரை ஆசீர்வதித்து தன்னுடன் சேர்த்துக் கொண்டார். அவரை யாழ்ப்பாண மக்கள் "கடையிற் சுவாமிகள்" என அழைத்தனர்.

கடையிற் சுவாமிகளை தேடிச் சென்ற சார்ஜன் சின்னத்தம்பியை, மர நிழலில் இருந்த கடையிற்சுவாமிகள்: சின்னத்தம்பி என்னையா தேடுகிறாய் என்று கேட்டார். இந்நிகழ்ச்சி சார்ஜன்ட் சின்னத்தம்பியின் மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அன்று முதல் இல்லறக் கடமைகளுடன் கடையிற் சுவாமிகளிடம் ஏற்பட்ட பக்தியுடன் ஆன்மீகக் கடமைகளிலும் ஈடுபட்டு வந்தார். கடையிற் சுவாமிகளினால் சார்ஜன் சுவாமிகள் ஆன்மிகத்தில் ஈடுபட்டாலும் இவரது குரு இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சின்மயானந்த சுவாமிகளே (பரமகுரு சுவாமிகள்) எனக் கூறப்படுகின்றது.

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வந்திருந்த சமயம் சார்ஜன் சின்னத்தம்பிக்கு அந்நிகழ்விற்கு சென்றிருந்தார். விவேகானந்த சுவாமிகள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு சின்னத்தம்பி பொருத்தமான விடை கூறினார். சரியான விடை கூறிய சின்னத்தம்பியைப் பார்த்து விவே கானந்தர் இது ஒரு நல்ல "வேதாந்த வித்து" என்று ஆசீர்வதித்ததாகக் கூறப்படுகின்றது.

வேதாந்த மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தின் தலைமைக் குருவாக சார்ஜன்ட் சுவாமிகள் இருந்தார். சார்ஜன்ட் சுவாமிகளை ஆட்கொண்ட கடையிற் சுவாமிகள் இக்குருபீடத்தின் முதலாவது பீடாதிபதியாகவும் சார்ஜன்ட் சுவாமிகள் இரண்டாவது பீடாதிபதியாகவும் கருதப்படுகின்றனர்.

1908 ஆம் ஆண்டு பங்குனி மாத சதய நட்சத்திரத்தில் சார்ஜன் சுவாமிகள் சமாதியடைந்தார். சார்ஜன் சுவாமிகளின் பிரதான சீடர் கனகரத்தினம் சுவாமிகள் தொடர்ந்து மூன்றாவது பீடாதிபதியாக பணியேற்றுக் கொண்டார். சார்ஜன் சுவாமிகளது சமாதி கோம்பயன் மணல் மயானத்தில் வைக்கப்பட்டுள்ளது. வேதாந்த மடத்தில் இவரது நினைவாலயம் அமைக்கப்பட்டு பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள்,
வேதாந்த மடம்.

# தேசபந்துவுக்கு எதிரான பிரேரணை ஏப்ரலில் பாராளுமன்றில்

(கொழும்பு)



பதவி இடைநிறுத்தப்பட்டு சிறையில் இருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை ஏப்ரல் 8 அல்லது 9 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்திர அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணை முன்வைப்பதற்கான தீர்மானம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இதில் 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். 2002ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் சட்டத்தின் 5 ஆவது பிரிவுக்கு அமைய இந்தத் தீர்மானம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர்களான மஹிந்த ஜயசிங்க, எரங்க குணசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன மற்றும் (சட்டத்தரணி) உபுல் அபேவிக்ரம ஆகியோர் இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர். (நி-8)

# இலவச சித்த மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக மூத்தோர் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவ பீடமும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து நடத்தும் இலவச சித்த மருத்துவ முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பருத்தித்துறை வீதி அருகிலுள்ள சட்டநாதர் சிவன் கோவில், நல்லூர்/திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என நல்லூர் பிரதேச செயலக மூத்தோர் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

## 'வெள்ளியில் ஞாயிறு'

# திருமறைக்கலாமன்றத்தின் தவக்கால ஆற்றுகை



(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையின் "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10, 11, 12, 13 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) திருமறைக்கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு இடம்பெறவுள்ளது என திருமறைக்கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (6-8)

# இராசிபலன்

27.03.2025
பங்குனி 13, வியாழக்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.23 மணிவரை

சதயம் முன்னிரவு 11.01 மணிவரை
சுபநேரம் 7.44-9.14 மணிவரை
இராகுகாலம் 1.44-3.14 மணிவரை

சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்
பிரதோச விரதம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.




அரசு வழிச்சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், வழிபாடு மகத்துவம் தரும், பயணங்கள் கைகூடும்.




உதவி செய்வதாகக் கூறியவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.




கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல் நலன் சிராகி உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் கூடும்.




பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்,போசன சுகமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




உடல் நலனில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.




தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**கைகள் மட்டுமல்ல மனதும் தூய்மையானதாக இருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமற்ற தேர்வு பரீட்சை முறையை உடனடியாக நிறுத்து!

## யாழ்.பல்கலைக்கழக இணை மருத்துவ விஞ்ஞான பீட மாணவர் சங்கம் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**இலவசக்கல்வியால் உருவான அரச பல்கலைக்கழகங்களில் பயிலும் சகல பட்டதாரிகளையும் அரச தொழிலில் இணைப்பதற்கு நியாயமான வேலை வாய்ப்புக் கொள்கையை உருவாக்கு, உள்ளகப் பயிற்சியை உடனடியாக வழங்கு! எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக இணை மருத்துவ விஞ்ஞான பீட மாணவர் சங்கத்தினால் கவனயீர்ப்பு பேரணி ஒன்று யாழில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திலிருந்து ஆரம்பமான குறித்த பேரணியின் போது நியாயமற்ற தேர்வு பரீட்சை முறையை உடனடியாக நிறுத்து, தாதிய பட்டதாரிகளை உடன டியாக அரச சேவைக்கு அமர்த்து, ஆட்சி மாறியது போல பட்டதாரிகளின் வாழ்க்கை மாறுமா?, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்து, போன்ற கோஷங்களை எழுப்பியும் பதாகைகளைத் தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.



குறித்த பேரணியானது யாழ்.நகருக்கு செல்ல முற்பட்ட வேளை அங்கு வருகை தந்தை பொலிஸார் உள்ளூராட்சித் தேர்தல் காலமாக இக்காலப்பகுதி உள்ளமையால் தேர்தல் சட்டத்தின் பிரசாரப் பேரணிகள், ஊர்வலங்கள், நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி பேரணியில் ஈடுபட்ட மாணவர்களை பொலிஸார் தடுத்தி நிறுத்தியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த பேரணியை கைவிட்டு மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் திரும்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# வடலிகளை மீளநடும் பரீட்சார்த்த முயற்சி வெற்றி

## பனை அபிவிருத்தி அதிகார சபை

(சாவகச்சேரி)

அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறாக காணப்படுகின்ற இளம் பனை வடலிகளை பிடுங்கிப் பாதுகாப்பாக நடும் செயற்பாடு ஒன்று மன்னார் மாவட்டத்தில் பனை அபிவிருத்திச்சபையினுடைய ஆலோசனைக்கு அமைவாக தனியார் நிறுவனம் ஒன்றினால் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் அது வெற்றியளித்திருப்பதாக பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில், இயற்கையை நேசிக்கும் தனியார் நிறுவனத்தின் மனப்பாங்கு பாராட்டுதற்குரியது. இந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்திருப்பதனால் ஏனைய அபிவிருத்திகளின் போதும் பனை வடலிகளை பிடுங்கிப் பாதுகாப்பான இடத்தில் நாட்டி பனை வளத்தைப் பேண முடியும்.

அண்மையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக இப் பரீட்சார்த்த செயற்பாடு பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திப் பணிகளின் போது பிடுங்கி அழிக்கப்படும் இளம் பனை வடலிகளை இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக பாதுகாக்க முடியும்.சிறியதொரு முயற்சி பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (6-8-30)

# தந்தை செல்வாவின் ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துக்காந்தி மூதறிஞர் சா.ஜே.வே.செல்வநாயகம் QC இன் 127 ஆவது ஜெயந்தி நிகழ்வு இவ்வாண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை அறங்காவலரும் வடமாகாண ஆளுநருமாகிய நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மேனாள் இந்தியத் துணைத் தூதுவரும் மேனாள் இந்திய உதவித் தூதுவருமாகிய ஆ.நடராஜன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி முன்னிலையாளராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# நனோ தொழில்நுட்ப மாநாடு யாழ்.பல்கலையில் இன்று

(யாழ்ப்பாணம்)

தூய சக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான அதிநுட்ப 'நனோ' திரவியங்கள் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு (AMCEHA 2025) இன்று யாழ்.பல்கலையில் ஆரம்பமாகவுள்ளது.

2019 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்திலும் 2023 ஆம் ஆண்டு இந்திய கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்திலும் வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து, குறித்த மாநாட்டுத் தொடரின் 3 ஆவது மாநாடு இன்று மற்றும் நாளை வரை யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள கைலாசபதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நோர்வே நாட்டு உயர்கல்வி, ஆற்றல் அபிவிருத்தி இயக்குனரகத்தின் உதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்தாலும், இந்திய கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்தினாலும், மேற்கு நோர்வே பல்கலைக் கழகத்தாலும் இம் மாநாடு கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தூய சக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான அதிநுட்ப திரனைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்களை நிவர்த்தி செய்வது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரவிராஜன் மற்றும் மேற்கு நோர்வே பல்கலைக்கழக பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை ஆகியோர் மாநாட்டின் தலைவர்களாகச் செயற்படுகின்றனர்.

நனோ தொழில்நுட்பத்தில் முன்னணி நிபுணர்களின் முக்கிய உரைகள், நனோ தொழில்நுட்பத்தின் பல்வேறு பயன்பாடுகளைக் காட்டும் தொழில்நுட்ப அமர்வுகள், மற்றும் நனோ தொழில்நுட்பத்தில் தமது உயர் கல்வியைத்தொடரும் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு தங்கள் ஆராய்ச்சியை முன்வைக்க வாய்ப்பு ஆகியவை மாநாட்டின் முக்கிய அம்சங்களாகும்.

இம்மாநாடு, இந்தியா, நோர்வே, அமெரிக்கா, ஜேர்மனி, மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த முப்பத்தைந்து உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 160 இற்கும் மேற்பட்ட சர்வதேச பங்கேற்பாளர்கள் உட்பட 350 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலுள்ள அறிஞர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும். மேலதிக தகவல்களுக்கு மாநாட்டின் அதிகாரப்பூர்வ https://conf.jfn.ac.lk/amceha/ எனும் இணையத்தள முகவரியூடாகப் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)



யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய அரசினதும், இந்திய மக்களினதும் ரம்ழான் அன்பளிப்பு பொதிகளை இஸ்லாமிய சகோதரர்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் இணைந்து அன்பளிப்புப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் ஸ்ரீராம நவமி தின பட்டாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான 'ஸ்ரீ ராம நவமிதின பட்டாபிஷேகம்' நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து ஒன்பது தினங்கள் தினமும் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. பட்டாபிஷேக இறுதி நாளாகிய ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து ராம பட்டாபிஷேகமும் நடைபெறும் என தேவஸ் தான பிரதமகுரு க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (6-8-33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் ஆதரவு இன்றேல் இலங்கை வளர்ச்சியடையாது

## அதானி குழுமத்தின் திட்டம் குறித்து ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் ஆதரவு நிராகரிக்கப் பட்டால் இலங்கை வளர்ச்சியடையாது. 2050 இல் இன்னும் ஏழ்மை நிலைக் குத் தள்ளப்படும் என முன்னாள் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.



நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரி விக்கையில்,

இந்தியா நமது நெருங்கிய அண்டை நாடு. எனவே இலங்கை செய்ய வேண் டியது இந்த உறவை சிறப்பாகப் பயன் படுத்துவதாகும்.

இலங்கைதனது வேலையை இந்தியா மூலம் செய்ய வேண் டும்.

அந்த நேரத்தில் இலங்கை 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறவில்லை என்றால், நமது நாடு என்னவாக இருந்திருக்கும்?".

இந்தியாவின் அதானி குழுமத்தின் முதலீட்டு முயற்சி இலங்கைக்கு மேலும் பல முத லீடுகளைக் கொண்டு வந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

முதலீட்டை முன்னுரிமையாகக் கொண்டு இலங்கை முன்னேற இதுவே ஒரே வழி. இந்தியாவை நாம் நிராகரித் தால், நாம் ஒருபோதும் வளர்ச்சியடைய மாட்டோம் என்று அவர் எச்சரித்தார்.

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந் தாலும், முன்னேற இந்தப் பாதையைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதி பதி ரணில் தெரிவித்தார். (நி-8)

# அனைத்து முன்பள்ளிகளிலும் பொதுப் பாடத்திட்டப் பரிந்துரைகள்

## அறிமுகப்படுத்த சிறுவர் விவகார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அனைத்து முன்பள்ளிகளிலும் பொது வான பாடத்திட்டத்துக்கான பரிந்துரை களை அறிமுகப்படுத்த மகளிர் மற்றும் சிறு வர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்பள்ளிகளுக்காக தேசிய கொள்கை யொன்றை அறிமுகப்படுத்தும் வேலைத் திட் டத்திற்கு இணையாக இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் 13,000 பதிவு செய்யப் பட்ட முன்பள்ளிகளும் பதிவு செய்யப்படாத 3,000 முன்பள்ளிகளும் காணப்படுகின்றன.

இந் நிலையில் முன்பள்ளி கட்டமைப்பு நவீனமயப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத் துக்கான பரிந்துரைகளை முன் வைப்பதற் காக கல்வியமைச் சின் பங்களிப்புடன் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப் பிட்டார்.

9 மாகாணங்களிலும் உள்ள அனை த்து முன்பள்ளிகளிலும் ஒரே கொள்கை யின் கீழ் இதனை நடைமுறைப்படுத்து வதே தமது எதிர்பார்ப்பு எனவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மேலும் தெரிவித்தார். (நி-8)

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**தலைவர்,**
**சங்கானை ப.நோ.கூ.சங்கம்.**

(C-2546)

## காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் 27.03.2025 வெள்ளிக்கிழமை அழகிய சித்திரத்தேரில் அலங்கரிக்கப்பட்டு வீதிவலம் வருகிறாள். அபிராமி அந்தாதி ஓதி தரிசிப்போம்! காரைநகர் ஆலயக் கும்பாபிசேகம் காண்போம்!

**சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்**
**புல்லும் பரி மளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்**
**செல்லும் தவநெறியும் சிவலோகம் சித்திக்கும்**

அபிராமி அந்தாதி -28

நடனமிடுகின்ற துணைவராகிய ஈழத்துச் சிதம்பரம் சொல்லையும் பொருளையும் போல் பிரிவின்றித் தழுவி நிற்கும் மணங்கமழும் மணற்காடு கும்பநாயகி முத்து மாரியம்மன் போன்றவள் என்பதும் பறங்கியர் காலத்திற்கு முற்பட்ட ஆலயம் ஆங்கிலேயர் காலத்தில் புனரமைக்கப்பட்டது என்பது பொதுவான பொருள். அவன் சொல்லானால் அவள் அதன் பொருள். அவள் சொல்லானால் அவன் அதன் பொருள் இதுவே சிவசக்தி ஐக்கியத்தின் சிறப்பு.

**ஸத்து சிதானந்தாமதாய் சகலவுயிர்குயிர் ஆனவன் நீ**
**தத்துவமஸ்யாதி மகா வாக்கிய தத்பரஸஸ்துவும் நீ**

அச் சொல்லின் இலட்சியப் பொருளாக எப்படிப் பொருந்துகிறாளோ அம்பாள் அவ்வாறே ஈழத்துச் சிதம்பரத்துடன் இலட்சியத் துணையாகப் பொருந்தித் தழுவுகிறாள்.

நாங்கள் 1996 இல் இடம்பெயர்ந்து மீள வந்த போது மார்கழித்திருவாதிரை நட்சத்திரத்தன்று ஈழத்துச் சிதம்பரம் அருள்மிகு அபிசேகம் வைத்தீஸ்வரக் குருக்கள் ஆசியுடன் அம்பாள் ஆலய சிவாச்சாரிகளாகிய வணக்கத்துக்குரிய சம்பந்தர் ஐயா பால், தயிர், நெய் சகல திரவியங்களுடன் பூ மழை பொழியவும் ஆலய ஆதின கர்த்தா சிவத்திரு முருகேசு ஐயா திருவெம்பா ஓதவும் N.K.பத்மநாதன், கணேசன் அவர்கள் நாதஸ்வரம் பொலிய ஊரோடு இருந்தவர்கள் கண்டு தரிசித்த காட்சிகளை இன்று காரைநகர் மக்கள் அனைவரும் 2026 காண்போம். அம்பாளை அபிராமி அந்தாதி ஓதிப் பிரார்த்திப்புடன் வணக்கத்துக்குரிய சம்பந்தர் ஐயாவும் ஈஸ்வரக் குருக்களும் காரைநகர் மக்களும் ஈழத்து மக்களும் இறைவனின் வடிவானதாகவும் கருதப்படும் வேதங்கள், பிரணவம், திருவைத்தெழுத்து மகாவாக்கியங்கள் ஆகியவை இறைத்தன்மையுடன் பொருந்துவதுபோல், தேவி அம்பிகை ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிசேகம் காண்போம். அனைவரது துன்பங்களும் நீங்கும்.


காரைநகர் அருள்மிகு ஆலயங்களாகிய மருதடி விநாயகர் 18 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியும் ஈழத்துச் சிதம்பரம், திக்கரை முருகன் இரு ஆலயமும் 18 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியும் அருள்மிகு ஆலயங்கள் பாலஸ்தானமாகி இருப்பது சிந்தியுங்கள் எனமூத்த சிவச்சாரிகர்களும் இந்தியா சிதம்பரம் தீட்சர்களும் நாட்டின் நன்மை கூறி ஆலோசனையாக அருள்வார்த்தையை அறிவித்திருக்கிறார்கள்.

**அறிவிக்க அறிவதே ஆன்மா!**
**இறைவன் தானாக அறிவான்**

திருமூலர் திருவாக்காற் போற்றப்பட்ட வரலாற்றைக் கொண்ட பஞ்சலிங்கம் இலங்கை பூர்வீக இயக்கர், நாகர் வழிபட்டு உய்வு பெறப் பதிந்த பரமசிவன் அருவுருவத்திருமேனியாகும். **ஈழத்துச் சிதம்பரமும் ஆகும். இலங்கையும் ஒரு தீவு, அதனருகில் ஏழு தீவுகள் அமைந்திருந்தன. இவற்றுள் சிவம் போற்றிப் பலம் பெற்ற புண்ணிய காரைதீவு இன்று காரைநகர் என அழைக்கப்படும் அருள் நிறைந்த ஈழத்துச் சிதம்பரம் மற்றும் பல ஆலயங்கள் இதில் காரைநகர் வடகிழக்கு மூலையில் மாணிக்கவாசகர் மடாலய அருகே தூம்பில் பிட்டித் திண்ணபுர மண்ணில் இடங்கொண்டு சிவனையே சிந்தித்து சித்திகள் சிதம்பரத்திற் பெற்று முத்தி கண்டனர்.**

**அறிவிக்க அறிவதே ஆன்மா!**
**அறிவான் தானாக இறைவன்!**

**க.கு.க சிவபாலன்,**
**போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



(C-2545)

## வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயில், இன்று விநாயகர் அருள் உற்சவம்! மஞ்சம் தரிசிப்போடு, காலை-மாலை சுப்பிரமணியர் மயில் காட்சி!

**விநாயனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயனே வேட்கை தனிவிப்பான்-விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்**
**தன்மையினால் கண்ணிற் பணியின் கனிந்து**

அருள்மிகு விநாயகனே கொடிய துன்பங்களை வேர் அறுக்க வல்லான், பொருட்பற்றை தணிவிப்பான்,வானுலகத்திற்கும் மண்ணுலகத்திற்கும் நாதனுமாம். ஆகையால் இன்று விநாயகர் அருள் மிகு தீர்த்தோற்சவம் கண்டு அவனது திருக்கமலப் பாதங்களை மனங்குழைந்து பணியுங்கள்-காலை தரிசிப்போம்.

மாலை வள்ளியம்மை, தெய்வானை அம்மை சுப்பிரமணியன் மயிலில் அருள் மிகுகாட்சியும் பிரதோஷ தரிசனமும் காண்போம் இன்று வியாழக்கிழமை

(27.03.2025)

திருக்கோயில்களில் நிகழுந் திருவிழாக்கள் வழிபடுகின்ற எல்லோரும் திருவருள் தீக்கை காலம் என்பதால் எல்லோரும் தம்மைக் குரு தீக்கையால் வீடுபேறடையும் சீடனாகப் பாவித்து மனம், மொழி, மெய் நாம். சிவனுக்காக்கி உலகத்துச்சிந்தை, பேச்சு, செயல்கள் நீக்கி இன்று மெய்யன்போடு திருமுறை ஓதித் தொழுது பேரின்பத்தில் நிறைத்தல் வேண்டும்.

**க.கு.க சிவபாலன்,**
**போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**




(C-2545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### தேர்தலில் வெளிநாட்டுத் தலையீடு இந்தியா, சீனா மீது பழி சுமத்தும் கனடா



(ஒட்டாவா)

சீனாவும் இந்தியாவும் தேர்தலில் தலையிட முயற்சிக்கக்கூடும் எனக் கனடா உளவுத்துறை குற்றம் சாட்டி உள்ளது.

அமெரிக்காவின் மற்றொரு மாகாணமாக கனடாவை சேர்க்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்து வரும் நிலையில், பாராளுமன்றைக் கலைத்து, ஏப்ரல் 28 இல் தேர்தலை நடத்துவதாகக் கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இது குறித்து கனடா உளவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கனடா பொதுத் தேர்தலில் சீனாவும் இந்தியாவும் தலையிட முயற்சிக்க வாய்ப்பு உள்ளது. அதே நேரத்தில் ரஷ்யாவும் பாகிஸ்தானும் அவ்வாறு செய்ய வாய்ப்பு உள்ளது. கடந்த தேர்தல்களில் சீனாவும் இந்தியாவும் தலையிட முயற்சி செய்தது. ஆனால் அவர்களின் தலையீட்டால் எந்தப் பாதிப்பும் இல்லை.

தற்போதைய தேர்தலில் கனடாவின் ஜனநாயக செயற்பாட்டில் தலையிட முயற்சிக்க, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது. கனடாவின் ஜனநாயக செயல்முறைகளில் தலையிடும் நோக்கத்தையும் திறனையும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது என்பதையும் நாங்கள் கண்டிருக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# கடல்சார் போ

# உக்ரைன் - ரஷ



**(வோஷிங்டன்)**

**கருங்கடலில் பாதுகாப்**
**உறுதி செய்வதற்கும், பரஸ்பர**
**தாக்குதல் நடத்துவதைத்**
**உக்ரைன் மற்றும் ரஷ்யாவு**
**தங்களை எட்டியுள்ளதாக**
**வித்துள்ளது.**

இந்த ஒப்பந்தங்கள் செயற்படுத்தப்பட்டால், உக்ரைனில் ரஷ்யாவின் மூன்று ஆண்டுகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவர அமைதிப் பேச்சுவார்த்தைகளை நோக்கி வோஷிங்டன் ஒருபடியாகக் கருதும் பரந்த போர்நிறுத்தத்தை நோக்கிய தெளிவான முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஜெலென்ஸ்கியை நம்ப முடியாது என்றும், வோஷிங்டன் அவருக்கு உத்தரவைப் பிறப்பித்தால் மட்டுமே கருங்கடல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும் என்றும் ரஷ்யா கூறியுள்ளது.

இந்தநிலையில், கடல்சார்

போர் ந
எரிசக்த
தாக்குத
இரண்
கொண
பாதுகா
ளார்.
முன்

### குடியுரிமை சான்றிதழ் கட்டாயம் தேர்தலில் மாற்றத்தை அறிவித்தார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

தேர்தல் நடைமுறையில் மாற்றங்களைக் கட்டாயமாக்கும் நிர்வாக உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். தினமும் அவர் வெளியிடும் புதுப்புது அறிவிப்புகள் பரபரப்பை கிளப்பி வருகிறது. சட்டவிரோதமாக குடியேறி உள்ளவர்களை கண்டறிந்து நாடு கடத்தும் பணியில் மும்முரமாக செயற்பட்டார்.

இந்நிலையில், வாக்காளர் பதிவுக்கு குடியுரிமைக்கான ஆவணச் சான்று கட்டாயம் இருக்க வேண்டும். தேர்தல் நாளுக்குள் வாக்குச் சீட்டுகளை அனைவரும் பெறுவதை உறுதிசெய்தல் உள்ளிட்ட அமெரிக்கத் தேர்தல் நடைமுறையில் மாற்றங்களைக் கட்டாயமாக்கும் நிர்வாக உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அதேபோல், "கூட்டாட்சி தேர்தல்களில் வாக்களிக்கும் தகுதிக்கு பாஸ்போர்ட் போன்ற குடியுரிமை சான்றிதழ் கட்டாயம் இருக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை, சமூகப் பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் வெளியுறவுத்துறை உள்ளிட்ட கூட்டாட்சி நிறுவனங்களை பணியில் உள்ளவர்களில் குடியுரிமை சான்றிதழ் அல்லாதவர்களை அடையாளம் காண உதவும் தரவுகளை தேர்தல் அதிகாரிகளிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கையெழுத்திட்ட பிறகு வரும் வாரங்களில் தேர்தல் நடவடிக்கைகள் எடுக்கப் [illegible] தெரிவித்தார். (நி-8)

### தென்கொரியாவில் விடாது எரியு 18 பேர் இதுவரை உ



(சியோல்)

தென் கொரியாவில் 5 நாட்களைக் கடந்து கொளுந்துவிட்டு எரியும் காட்டுத் தீயினால் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென் கொரியாவின் சான்சியாங்க் பிராந்தியத்தில் நிலவும் மோசமான வறண்ட வானிலை காரணமாக காட்டுத்தீ பற்றியது. 5 நாட்களை கடந்தும் தீ கொளுந்து விட்டு எரிந்து வருகிறது. உய்சாங் பகுதியில் 1300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த புத்தர்


கோவில்
சேதம்
பலத்
ணமான
கட்டுக்
காட்டுத்
பேர்
றனர்.
படுகாய
பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம்
# ஷ்யா உடன்பாடு

புகாப்பான வழித்தடத்தை ஸ்பர எரிசக்தி வசதிகள் மீது தத் தடை செய்வதற்கும், பாவுடன் தனித்தனி ஒப்பந் தாக அமெரிக்கா தெரி



போர் நிறுத்தம் மற்றும் பரஸ்பரம், எரிசக்தி உட்கட்டமைப்பு மீதான தாக்குதல்களை நிறுத்துதல் ஆகிய இரண்டிற்கும் கீவ் ஒப்புக் கொண்டதாக உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

முன்னதாக, போரை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதற்காக முயன்ற அமெரிக்கா, முதலில் 30 நாள் முழுப் போர் நிறுத்தத்தை முன்மொழிந்தது.

இதற்கு உக்ரைன் மார்ச் 11ஆம் திகதியன்று கொள்கையளவில் ஒப்புக் கொண்டது.

ஆனால் புடின் நீண்ட நிபந்தனைகள் மற்றும் கேள்விகளுடன் போர் நிறுத்தத் திட்டத்துக்கு பதிலளித்திருந்தார். (நி-8)

## "கோல்டு கார்டு" திட்டத்திற்கு அமோக வரவேற்பு




(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க அனுமதிக்கும் கோல்டு கார்டு திட்டத்தை, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிமுகம் செய்துள்ள நிலையில், அதற்கு கடும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. முதல் நாளில் மட்டும் 1,000 கோல்டு கார்டுகள் கேட்டு பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்டு லுட்னிக் தெரிவித்ததாவது,

அமெரிக்காவில் காலவரம்பின்றி வசிக்க அனுமதிக்கும் கோல்டு கார்டு அறிமுகமாகிறது. இதற்கான மென்பொருளை தொழிலதிபரும் அரசின் சிக்கன நடவடிக்கைக் குழு தலைவருமான எலான் மஸ்க் வடிவமைத்து வருகிறார்.

இன்னும் இரண்டு வாரங்களில் மென்பொருள் தயாராகி விடும். ஜனாதிபதி ட்ரம்ப் இதுபற்றி அறிவித்த முதல் நாளிலேயே 1,000 கோல்டு கார்டுகள் விற்பனையாகி விட்டன.

உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 3.70 கோடி பேர் இந்தக் கோல்டு கார்டை வாங்கும் வசதி படைத்தவர்களாக உள்ளனர். எனவே, 10 லட்சம் கோல்டு கார்டுகளை எளிதாக விற்பனை செய்ய முடியும் என ஜனாதிபதி ட்ரம்ப் கருதுகிறார்.

இதன் வாயிலாக, பல நாடுகளில் இருந்து, அமெரிக்காவில் வசிக்க விரும்பும் வசதி படைத்தவர்களும், நெருக்கடி நிலையை சந்திப்பவர்களும் வருவார்கள். குற்றவாளிகள், தீயவர்கள் எனத் தெரியவந்தால், கோல்டு கார்டை ரத்து செய்யும் அதிகாரம் அரசிடம் இருப்பதால் நல்லவர்களாக, சட்டத்தை மதிப்பவர்களாக இருப்பது அவசியம். (நி-8)

## எரியும் காட்டுத்தீ
## உயிரிழப்பு

கோவில் தீயில் சிக்கி முழுமையாக சேதம் அடைந்தது.


பலத்த காற்று மற்றும் உஷ்ணமான நிலை காரணமாக, தீ கட்டுக்கடங்காமல் எரிகிறது. காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 18 பேர் பலியாகி இருக்கின்றனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்த அதிகாரிகள் முயற்சித்து வரும் அதே வேளையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அண்டாங் உள்ளிட்ட பல பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்த 10,000 இற்கும் மேற்பட்ட தீயணைப்புத் துறை வீரர்கள் களத்தில் இறங்கி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (நி-8)



## வாழ்வதற்கு செலவுகூடிய நாடுகளில் பாகிஸ்தான் முதலிடத்தில்



(இஸ்லாமாபாத்)

தெற்காசிய நாடுகளில் வாழ்வதற்கு அதிகம் செலவாகும் நாடு என்ற பட்டியலில் பாகிஸ்தான் ஏற்கனவே முதலிடத்தைப் பிடித்திருந்த நிலையில், கடுமையான பணவீக்கம் காரணமாக தற்போது ஆசிய நாடுகளிலேயே வாழ்வதற்கு அதிகம் செலவாகும் நாடு என்ற பட்டியலிலும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி நடத்திய ஆய்வில், பாகிஸ்தான் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. 25 சதவீதம் என்ற அளவில் அந்நாட்டில் பணவீக்கம் உள்ளது.

இதனால், ஆசியாவிலேயே வாழ்வதற்கு அதிகம் செலவாகும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கடந்த வாரம் வியாழக்கிழமை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆய்வு முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில், ஆசியக் கண்டத்தில் உள்ள 46 நாடுகளில் பாகிஸ்தான் நாட்டின் பணவீக்கம் கடுமையாக இருப்பதாகவும், அடுத்த நிதியாண்டிலாவது 15 சதவீதமாகக் குறைக்கப் படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில் 250 மில்லியன் மக்கள் தொகையில் 98 மில்லியன் பாகிஸ்தான் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ்தான் வாழ்கிறார்கள். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு (01)




அன்பு ஜவஹர்ஷா

2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2015 என்ற இலக்கத்துடன் 2025.03.25 ஆம் திகதியிடப்பட்டு பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக்க பண்டாரவின் ஒப்பந்தத்துடன் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் விடுத்துள்ள இந்தச் சுற்றறிக்கை 186 பக்கங்கள் கொண்டதாகவும் ஜனாதிபதி அடிக்கடி சொல்வது போல விஞ்ஞான பூர்வமான சம்பள மாற்றத்தைக் கொண்டதாகவும் உள்ளமையை இங்கு முதலில் குறிப்பிட வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கையில் உள்ள



பெரும்பாலான விடயங்கள் வலம்புரி வாசகர்கள் அறிந்த விடயங்களாகும். கடந்த இரண்டு, மூன்று வார காலமாக இது தொடர்பான தகவல்கள் வலம்புரியில் அட்டவணைகளுடன் வெளியாகி வந்தமையை இங்கு குறிப்பிட வேண்டும். இந்தத் தகவலில் உள்ள சில மாற்றங்கள் மட்டும் முதலில் இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தலின் படி 2024.12.31 அன்றைய சம்பளத்திற்கே 2025.01.01 ஆம் திகதிக்கு நேரொத்தபடியின் படி சம்பளம் தீர்மானிக்கப்படுகிறது. 2025.01.01 என்று கணக்கெடுக்கப்பட்டாலும் 2025.04.01 முதலே நிலுவை இன்றி சம்பளம் வழங்கப்படவுள்ளது.

2025.01.01 முதல் ஓய்வு பெறுகின்றவர்களுக்கு குறிப்பாக 2025.04.01 முதல் ஓய்வு பெறுகின்றவர்களுக்கும் 2027.01.01 சம்பளப்படி ஓய்வூதியம் செய்யப்பட்டாலும் ஓய்வூதியப் பணிக்கொடையானது 2025.01.01, 2025.04.01, 2026.01.01, 2027.01.01 என்று ஓய்வுபெறும் காலச் சட்டத்தின் படியே கணிக்கப்படுகின்றது.

2025.04.01 முதல் ஓய்வுபெறுகின்றவர்களுக்கு 2027.01.01 அன்று சம்பளத்திற்கு ஓய்வூதியம் செய்யப்பட்டாலும் ஓய்வுதியப் பணிக்கொடையானது அந்தக்கால கட்டத்தின் படியே கிடைக்கும் என்பதே இதன் மீள் விளக்கமாகும்.

அட்டவணை I,II,III எனப் பிரித்து சேவை வகுதி சம்பள மாற்ற மாதிரிக் கடிதங்கள் போன்ற சகல விடயங்களுடனும் இந்தச் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1இல் புதிய சம்பள மீளமைப்புக் குறியீட்டின் கீழ் அந்த குறியீடுகளும் சேவைப் பதவிகளும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் அட்டவணையின் கீழ் 2025ஆம் ஆண்டுக்காக அரசாங்க சேவையின் சம்பள அமைப்பு விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அட்டவணையின் கீழ் சம்பள முறையோடு வருடாந்த சம்பள ஏற்றங்களுடன் சம்பள படிநிலைகளும் காட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் அட்டவணையில் 2025.04.01 முதல் எவ்வாறு சம்பளம் வழங்கப்படும் என்பது அட்டவணைகளுடன் காட்டப்பட்டுள்ளது. 2025.01.01 (2025.04.01), 2026.01.01, 2027.01.01 ஆகிய திகதிகளில் கிடைக்க வேண்டிய சம்பளமானது எடுக்கும் சம்பளத்திற்கு நேரொத்த நிலையில் வலம்புரியில் வெளியான அட்டவணைகள் போல் குறிப்பிடப்பட்டுள்ளன.

இறுதியில் உப இணைப்புக்களாக சேவை கட்டங்களும் சம்பள மாற்ற மாதிரிக்கடிதங்களும் இணைக்கப்பட்டுள்ளது.

14 இலட்ச அரசாங்க ஊழியர்களுக்கு சுற்றறிக்கை வெளியாகி 15 நாட்களில் சம்பள மாற்றங்களைத் தயாரித்து புதிய சம்பளம் வழங்குவது சாத்தியமில்லை. ஆகையால் கோவைகளில் சம்பள மாற்றக் கடிதங்களைத் தயாரித்து போடும் ஏற்பாட்டுடன் III ஆம் அட்டவணையின் படி சம்பளத்தை வழங்குவதே சாத்தியமாகும் என அறியப்படுகின்றது.

IV ஆம் அட்டவணையில் உள்ள சேவை வகுதியின்படி இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையினருக்கும் மூன்றாம் மட்டத்தின் கீழ் பதவிநிலை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இனி சுற்றறிக்கையில் உள்ள முக்கிய விடயங்களைப் பார்ப்போம்.

**01.** 2025 வரவு - செலவு முன்மொழிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 மற்றும் அதற்கு இணைந்த வகையில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை / ஏற்பாடுகளின்படி அரசாங்க சேவையின் பதவிகள் / சேவைகள் / சேவை வகுதிகளின் பொருட்டு செயற்படும் ஏற்பாடுகள் மற்றும் சம்பள அளவுத் திட்டத்திற்குப் பதிலாக, அப்பதவிகள்/ சேவைகள் / சேவை வகுதிகளின் பொருட்டு இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள்/ சேவைகள் / சேவை வகுதிகளுக்கு இணங்க அட்டவணை II இன் கீழான சம்பள அளவுத்திட்டம் 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்துவதற்கும், 2025.04.01 ஆம் திகதி தொடக்கம் எவ்விதமான நிலுவைகளும் செலுத்தப்படாமல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச்சம்பள அளவுத் திட்டத்திற்கமைய சம்பளத்தைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**02. புதிய சம்பள அளவுத் திட்டத்திற்குள் கீழே குறிப்பிடப்படும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

i. 2019.04.22ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2019 இற்கமையச் செலுத்தப்படும் ரூபா 2.500/- மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவு.

ii. 2022.01.13 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2022 இற்கமையச் செலுத்தப்படும் ரூபா 5,000/- மாதாந்தக் கொடுப்பனவு.

**03. சம்பள மீளமைப்பு**

3.1 2024.12.31ஆம் திகதிக்குரிய சம்பள அளவுத்திட்டங்களிலிருந்து இச் சுற்றறிக்கையில் புதிய சம்பள அளவுத் திட்டங்களுக்கு சம்பள மீளமைப்புச் செய்தல் படிநிலை படிநிலையாக வைக்கும் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.2 சம்பள மீளமைப்புக்களைத் தயாரிக்கும் வசதியின் பொருட்டு இச் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்படும் சகல சம்பள அளவுத் திட்டத்திற்கும் அண்மித்த உயர் பதவிக்கு / வகுப்பிற்கு / தரத்திற்குப் பதவியுயர்வு பெறவில்லை எனின், கிடைக்கும் சம்பள படிநிலையும் உட்படும் வகையில் ஒவ்வொரு பதவி / தரம் / வகுப்பின் பொருட்டு வெவ்வேறாகச் சம்பள மீளமைப்பு நிரல் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளது.

3.3 சம்பள மீளமைப்புச் செய்யும் போது 2024.12.31ஆம் திகதிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் உரித்தான சம்பளக் குறியீடு மற்றும் வகுப்பு / தரத்தினை அடையாளம் காணல் வேண்டும் அதற்கமைய இச்சுற்றிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரொத்த சம்பளக் குறியீடு மற்றும் பதவி / தரம் / வகுப்பினை அடையாளம் கண்டு அதற்குரிய அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள மீளமைப்பு நிரலைத் தெரிவு செய்தல் வேண்டும்.

3.4 மேலே 3.3 இல் தெரிவு செய்யப்பட்ட மீளமைப்பு நிரலின்படி 2024.12.31 ஆம் திகதிற்குரியதான சம்பளப் படிநிலைக்கு நேரொத்த 2025.01.01 ஆம் திகதிக்கு உரியதான சம்பளப் படிநிலைக்கமைய உரித்தான சம்பளத்தில் அமர்த்துதல் வேண்டும். அதன் பொருட்டு இச் சுற்றறிக்கையின் இணைப்பு I என உள்ள சம்பள மீளமைப்பு மாதிரியைப் பயன் படுத்தல் வேண்டும். (மாதிரிச் சம்பள மீளளமைப்பின் பொருட்டு இணைப்பு I (அ) ஐப் பார்க்கவும்.)

3.5 மேலே 3.4 இன் படி 2025.01.01 ஆம் திகதிக்கு அமர்த்தப்பட்ட சம்பளத்திற்கமைய அவ் வருடத்திற்குரிய சம்பள ஏற்றத்தினை வழங்கியதன் பின்னர் 2025.12.31 ஆம் திகதிக்கு உத்தியோகத்தருக்கு உரிய சம்பள படிநிலையின் மீது 2026.01.01 ஆம் திகதிக்கு உத்தியோகத்தருக்குச் செலுத்தப்படாத தொகை மற்றும் செலுத்தப்படும் தொகையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு இச் சுற்றறிக்கையின் இணைப்பு II என உள்ள சம்பள மீளமைப்பு மாதிரியை உபயோகப்படுத்துதல் வேண்டும். (மாதிரிச் சம்பள மீளமைப்பின் பொருட்டு இணைப்பு II (அ) ஐப் பார்க்கவும்.)

3.6 இச் சுற்றறிக்கையின்படி உத்தியோகத்தருக்கு உரித்தான சம்பளத்தினை முழுமையாக பணமாக செலுத்தி முடிவடையும் 2027.01.01 ஆம் திகதி வரையில் 2025.01.01 ஆம் திகதிக்கு மற்றும் 2026.01.01 ஆம் திகதிக்குரியதாகச் செலுத்தப்படாத தொகை மற்றும் செலுத்தும் தொகை ஒவ்வொரு அளவுத் திட்டத்தின் ஒவ்வொரு சம்பள படிநிலைக்குரியதாக இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளது.

3.7 இதன் போது, இச்சுற்றறிக்கைக்கமைய உண்மையிலேயே சம்பளக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படும் 2025.04.01 ஆம் திகதிக்கு இணைப்பு I இற்கமைய உத்தியோகத்தருக்கு சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்ளல் வேண்டும்.

3.8 இங்கு கீழ் உள்ள உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஒவ்வொரு சம்பள அளவுத்திட்டப் படிநிலைகளிற்கு உரிய சம்பளத்தின் நிகர அதிகரிப்பினை கணக்கிட்டு, அதற்கமைய ஒவ்வொரு வருடத்திற்கும் உரியதாகச் செலுத்தப்படும் தொகை மற்றும் செலுத்தப்படாத தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

3.8.1 2024.12.31 ஆம் தினத்திற்கு கிடைக்கப் பெற்ற சம்பளம் மற்றும் அச்சம்பளத்திற்கு நேரொத்த 2025.01.01 ஆம் திகதிக்கு இச்சுற்றறிக்கையின் புதிய சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய உரித்தாகும் சம்பளத்திற்கிடையிலான வேறுபாட்டை கணக்கிடல் வேண்டும்.

3.8.2 மேற்படி 3.8.1 படி கணக்கிடப்பட்ட வேறுபாட்டில் மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2500/- இற்கு மாதாந்த இடைக்கால கொடுப்பனவு மற்றும் ரூபா 5000/- மாதாந்தக் கொடுப்பனவினை கழித்து சம்பளத்தின் நிகர அதிகரிப்பினை கணிக்கிடல் வேண்டும்.

3.8.3 மேற்படி 3.8.2 இற்கமையக் கணக்கிடப்பட்ட சம்பளத்தின் நிகர அதிகரிப்பின் ரூபா 5,000/- ம் மற்றும் அதற்கு மேலதிகமாக அதிகரிக்கும் தொகையின் 30% , 2025.01.01 ஆம் திகதியிலும், viii இற்கமைய கணக்கிடப்பட்ட சம்பளத்தின் நிகர அதிகரிப்பின் ரூபா 5,000/- ம் மற்றும் அதற்கு மேலதிக மாக அதிகரிக்கும் தொகையின் 65% உம் 2026.01.01 ஆம் திகதியிலும், சம்பளத்தின் முழுமையான நிகர அதிகரிப்பு 2027.01.01 ஆம் திகதியிலும் உத்தியோகத்தருக்கு உரித்தாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட சம்பளம், உண்மையிலேயே செலுத்தப்படுவது 2025.04.01 ஆம் திகதியிலிருந்தாகும். இதன்போது, 2025.01.01 திகதி மற்றும் 2025.03.31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் உத்தியோகத்தரொருவரது சம்பளத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின், அம் மாற்றத்திற்கமைய உரித்தாகும் சம்பளத்திற்கு 2025.01.01 ஆம் திகதிக்கு நேரொத்ததான சம்பளத்திற்குரியதாக சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், 2025.01.01 மற்றும் 2025.03.31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் எவரேனும் உத்தி யோகத்தரொருவரது சம்பளத்தில் மாற்றங்கள் ஏற்படாவிடின், அவருக்கு 01.01.2025 ஆம் திகதிக்கு உரித்தாகும் சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும்.

இச்சம்பளக் கொடுப்பனவின் போது, அட்டவணை III ஐ ஏற்புடைய தாக்கிக் கொள்ளல் வேண்டும் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுடையில் முச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் விபத்து



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், கட்டுடை சந்திக்கு அண்மையில் நடந்த விபத்தில் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பலத்த சேதத்துக்குள்ளானது. எனினும் தெய்வாதீனமாக உயிர் ஆபத்தோ, காயங்களோ எவருக்கும் ஏற்படவில்லை.

குறித்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றுள்ளது. இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில், சண்டிலிப்பாயில் இருந்து யாழ். நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் மானிப்பாயிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியுமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்குறித்த விபத்தினால் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. ஆயினும் எவருக்கும் சிறு காயமேனும் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (க-6-8)

# கோடாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கம்பஹா - பமுனுகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுகம பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் பமுனுகம பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 1,890லீற்றர் கோடா (10 பீப்பாய்கள்) பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# சிறையில் தடுத்து வைக்கப்பட்ட மீனவர்களைப் பார்வையிட்ட

## இந்திய மீனவ சங்க பிரதிநிதிகள்

(குருமன்காடு)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை இந்திய மீனவ சங்கப் பிரதிநிதிகள் நேற்று பார்வையிட்டு கலந்துரையாடினர்.

வவுனியாவிற்கு வருகை தந்த இந்தியாவின் இராமேஸ்வரம் மாவட்டத்தின் இந்திய விசைப்படகு மீனவ சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா, இராமேஸ்வரம் பாரம்பரிய விசைப்படகு மீனவ சங்கத்தைச் சேர்ந்த ஆல்வின் பெர்னாண்டோ, மண்டபம் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த இருதயராஜ் ஜஸ்ரின், தங்கச்சிமடம் விசைப்படகு மீனவர் சங்கத்தை சேர்ந்த ஜெருசிமான்ஸ், பாம்பன் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ராஜப்பன் சகாயம் ஆகியோர் நேற்று பிற்பகல் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று இந்திய மீனவர்களைப் பார்வையிட்டனர்.

எல்லை தாண்டியும், சட்ட விரோத முறைகளைப் பயன்படுத்தியும் மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 வரையான இந்திய மீனவர்களை அவர்கள் பார்வையிட்டதுடன், அவர்களது தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த மீனவர்களைப் பார்வையிட இந்திய மீனவ சங்க பிரதிநிதிகளுக்கு விசேட ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# விசேட கற்கைகளுக்கான அனுமதிகளுக்கு நாடளாவிய ரீதியில் பொதுப்பரீட்சை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் நுண்கலை மற்றும் குறிப்பிட்ட சில சிறப்புப் பட்டப்படிப்பு அனுமதிக்குத் தேவையான பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட பரீட்சையை அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை, நுண்கலை, மொழிபெயர்ப்பு கற்கைகள், விளையாட்டு விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடப் பிரிவுகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தனித்தனியாக பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளை நடாத்தி வந்தன. ஆனால், பாராளுமன்றத்தின் பொது நிறுவனங்களுக்கான குழுவின் (கோப்) பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளின் காரணமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொது முறைமையைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆகியோர் பங்கேற்று, பரீட்சைகள் திணைக்களத்தின் கீழ் இந்தப் பரீட்சைகளை நடத்தும் வாய்ப்புகள் தொடர்பில் ஆராயவுள்ளனர். (6-8)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250-280 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 600 |
| தக்காளி | 200 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180-220 | 200 |
| கோவா | 250 | 200 | 400 |
| கரட் | 550 | 700 | 800 |
| பூசணி | 140 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 60-80 | 250 |
| சின்ன வெங்காயம் | 180 | 80-220 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 145 | 150 |
| பாகற்காய் | 350 | 450-550 | 500 |
| வெண்டக்காய் | 300 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 250 |
| பயற்றங்காய் | 200 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 300 |
| கறிமிளகாய் | 800 | 400-500 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 2000 | 2500 |
| போஞ்சி | 400 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 80-90 | 150 |
| தேசிக்காய் | 250 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150-240 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 120 | 80-100 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 200 |


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1985 இந்து
நட்சத்திரம்: மகம் 12 இல் செவ்
கி.பா: 19
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: O/L, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15262

பிறப்பு:1982 இந்து
நட்சத்திரம்: சுவாதி 7 இல் செவ்
கி.பா: 31
உயரம்:5' 7"
தகைமை/தொழில்- BSc(QS), Project Estimater (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15263

பிறப்பு: 1996 RC
நட்சத்திரம்: கேட்டை 12 இல் செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L, France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15267

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 12 இல் செவ்
கி.பா: 29
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BA, Assistant Accountant
எதிர்பார்ப்பு:உத்தியோகம்
தொ.இ: G/15293

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: சுவாதி 8 இல் செவ்
கி.பா:26
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: MLT(final year)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/15295

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: பூரம் 8 இல் செவ்
கி.பா:24 1/2
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: ACCA, MBA, AccountAnalyst
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், சைவ போசனம்
தொ.இ: G/15298

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 732





எனக்காக உன்னிடம் தூது சொன்னான் அல்லவா? அதற்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்." அப்படியானால் அவன் சொன்னது உண்மைதானா? "உண்மைதான் பூங்குழலி! அதில் சந்தேகமில்லை."

"உனக்கு ஏன் என்னிடம் ஆசை உண்டாயிற்று, அமுதா?" "அன்பு உண்டாவதற்குக் காரணம் சொல்ல முடியுமா?" "யோசித்துப் பார்த்துச் சொல்லேன். ஏதாவது ஒரு காரணம் இல்லாமலா இருக்கும்?"

"அன்பு ஏன் ஏற்படுகிறது, எவ்வாறு ஏற்படுகிறது என்று இதுவரை உலகில் யாரும் கண்டுபிடித்துச் சொன்னதில்லை, பூங்குழலி!" "ஒருவருக்கொருவர் அழகைப் பார்த்து ஆசை கொள்வதில்லையா?"

"அழகைப் பார்த்து ஆசை கொள்வதுமுண்டு மோகம் கொள்வதும் உண்டு. ஆனால் அதை உண்மையான அன்பு என்று சொல்ல முடியாது. அது நிலைத்திருப்பதும் இல்லை. சற்று முன் வந்தியத்தேவன் என்று சொன்னாயே, அவன் என்னைப் பார்த்தவுடன் என்னிடம் சிநேகம் கொண்டு விட்டான். அவனுக்காக நான் என் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தேன். என் அழகைப் பார்த்தா, என்னிடம் அவன் சிநேகமானான்?"

"ஆனால் உன் சினேகிதன் என் அழகைப் பற்றி ரொம்ப, ரொம்ப வர்ணித்தான் இல்லையா?" "உன் அழகைப் பற்றி வர்ணித்தான். ஆனால் உன்னிடம் ஆசை கொள்ளவில்லை. பழுவூர் ராணியின் அழகைப்பற்றி நூறு பங்கு அதிகம் வர்ணித்தான், அவளிடம் அன்பு கொள்ளவில்லை." "அதன் காரணம் எனக்குத் தெரியும்." "அது என்ன?"

"அதோ இளவரசருடன் பேசிக் கொண்டிருக்கும் இளைய பிராட்டியிடம் அந்த வீரனின் மனம் சென்று விட்டதுதான் காரணம்." "இதிலிருந்தே அழகுக்கும் அன்புக்கும் சம்பந்தமில்லையென்று ஏற்படவில்லையா?"

"அது எப்படி ஏற்படுகிறது? இளையபிராட்டியை விட நான் அழகி என்றா சொல்லுகிறாய்?" "அதில் என்ன சந்தேகம், பூங்குழலி! பழையாறை இளையபிராட்டியைக் காட்டிலும், அதோ தூண் மறைவில் நிற்கும் கொடும்பாளூர் இளவரசியைக் காட்டிலும், நீ எத்தனையோ மடங்கு அழகி. மோகினியின் அவதாரம் என்று பலரும் புகழும் பழுவூர் இளையராணியின் அழகும் உன் அழகுக்கு இணையாகாது. இப்படிப்பட்ட தெய்வீகமான அழகுதான் எனக்குச் சத்துருவாயிருக்கிறது. அதனாலேயே என் மனதில் பொங்கிக் குமுறும் அன்பை என்னால் உன்னிடம் வெளியிடவும் முடியவில்லை. வானுலகத் தேவர்களும் மண்ணுலகத்தின் மன்னாதி மன்னர்களும் விரும்பக்கூடிய அழகியாகிய நீ, எனக்கு எங்கே கிடைக்கப் போகிறாய் என்ற பீதி என் மனத்தில் குடி கொண்டிருக்கிறது!"

பூங்குழலி சற்று யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு "அமுதா! உன் பேரில் எனக்கு ஆசை இல்லை என்று நான் சொல்லிவிட்டால், நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"சில நாட்கள் பொறுமையுடன் இருப்பேன். உன் மனம் மாறுகிறதா என்று பார்ப்பேன்." "அது எப்படி மாறும்?"


"மனிதர்கள் மனது விசித்திரமானது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நாவிதனின் பேராசை



ஒரு சிறிய நகரத்தில் மணிபத்திரன் என்ற ஒரு வியாபாரி வாழ்ந்து வந்தான். அவனும் அவன் மனைவியும் அன்பும் உதவும் குணமும் கொண்டவர்கள். அந்த நகரத்திலுள்ள அனைவரும் அந்தத் தம்பதியைப் பற்றி அறிவார்கள். அவர்களுடைய விருந்தோம்பும் பண்பால் அனைவரும் மகிழ்வடைந்தனர்.

ஒரு முறை கடலில் சென்று கொண்டிருந்த மணிபத்திரனின் எல்லாக் கப்பல்களும் புயலால் சேதமடைந்தன. அவற்றில் விலை மதிப்பற்ற பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன. அவை எல்லாம் அழிந்து போயின. வியாபாரத்திற்காக அவனுக்குக் கடன் கொடுத்தவர்கள் அனைவரும் உடனே பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு அவனை வற்புறுத்தினார்கள். தன்னுடைய செ[illegible] கள் அனைத்[illegible] கடனை விற்று அவன் அடைக்க வேண்டியதாயிற்று. முடிவில் அவன் எல்லாவற்றையும் இழந்து பரம ஏழையானான். செல்வம் அவனை விட்டுச் சென்றதும் அவனு[illegible] அவனை விட்டுச் [illegible]றனர்.

மணிபத்திரன் அதை நினைத்து மிகவும் மனம் வருந்தினான். 'என்னுடைய நண்பர்களும் என்னை விட்டுச் சென்று விட்டனரே! அவர்கள் என்னுடைய செல்வத்தைத் தான் விரும்பி இருக்கிறார்கள் என்பது இப்போது தெரிகிறது,' என்று எண்ணி வருத்தமடைந்தான். வறுமையையும் துக்கத்தையும் தவிர என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்க என்னிடம் எதுவுமில்லையே.

அவர்கள் துன்பப்படுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வது ஒன்றுதான் சிறந்த வழி. இப்படிப்பலவாறு எண்ணிக் கவலைப்பட்டவாறே மணிபத்திரன் உறங்கிப் போனான். அன்று இரவு அவனுக்கு ஒரு விசித்திரமான கனவு தோன்றியது. ஒரு துறவி அவன் கனவில் தோன்றி, என் தலையை நீ ஒரு குச்சியால் தொட்டால் உடனே பிறவிகளுக்குத் தேவையான அளவு தங்கக் காசுகளாக நான் மாறுவேன் என்று கூறினார்.

அதே கனவில் மணிபத்திரன் அந்தத் துறவியைக் குச்சியால் தொடுவது போலவும் துறவி உடனே தங்க நாணயக் குவியலாக மாறுவதாகவும் காட்சிகளைக் கண்டான். காலையில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு மணிபத்திரன் கண் விழித்தான். 'என்னுடைய கனவு ஈடேறுமா? நான் மறுபடியும் செல்வனாவேனா? என்று மணிபத்திரன் தனக்குள் எண்ணிக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தவே ஐக்கிய இராச்சியத்தின் பயணத்தடை

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த அறிக்கை

*(கொழும்பு)*

புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தவே ஐக்கிய இராச்சியம் முன்னாள் ஆயுதப் படைத் தளபதிகளுக்கு பயணத்தடை விதித்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஆயுதப்படைத் தளபதிகளுக்கு எதிராக பிரிட்டன் விதித்த தடைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2002 யுத்த நிறுத்த உடன்படிக்கை காணப்பட்டபோதிலும் 2002 பெப்ரவரி முதல் செப்ரெம்பர் 2005 வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் 363 கொலைகளில் ஈடுபட்டனர். 2005 நவம்பரில் நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட முதல் வாரங்களில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்தன.

இவற்றில் மிகவும் பாரதூரமான சம்பவங்களாக டிசம்பர் நான்காம், ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களைக் குறிப்பிடலாம்.

2006ம் ஆண்டு ஜனவரி 5ம் திகதி கடற்படைக் கலத்தின் மீது இடம்பெற்ற தாக்குதலையும் 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவத் தலைமையகத்திற்குள் இராணுவத் தளபதியை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் குறிப்பிடலாம்.

இவற்றிற்கு அப்பாலும் எனது அரசாங்கம் 2006 ஜனவரியிலும் ஜூன் மாதத்திலும் ஜெனீவாவிலும் ஒஸ்லோவிலும் விடுதலைப்புலிகளுடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேறியது.

ஜூலை 2006 இல் மாவிலாறு அணைக்கட்டை விடுதலைப்புலிகள் மூடி திருகோணமலை மாவட்ட விவசாயிகளிற்கான நீர் விநியோகத்தைத் தடுத்ததை தொடர்ந்து யுத்தம் மீண்டும் ஆரம்பமானது. 2009 மே மாதம் விடுதலைப் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்படும்வரை யுத்தத்தை நிறுத்தவில்லை.

இராணுவ நடவடிக்கைகளின் போது பரந்துபட்டளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகப் பிரிட்டன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன்.

2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி பின்னர் ஜனநாயக அரசியலில் நுழைந்த விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணா அம்மான் மீது தடைகள் விதிக்கப்பட்டிருப்பது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழர்களைத் தண்டிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தமிழ் புலம்பெயர்ந்தோரை திருப்திப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்பது தெளிவாகிறது என மகிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். *(ம-7)*

---

மேலான எண்ணங்களால் மனம் நிறைந்திருந்தால், நான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சி தரும். *~ பாரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறம் காத்த அந்தண சிரேஷ்டர் சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள்

எங்கள் மண்ணில் வாழ்ந்த அந்தணச் சிரேஷ்டர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ தாணு. மகாதேவக் குருக்கள் அவர்கள் தேகவியோகம் அடைந்துவிட்டார் என்ற செய்தி வேதனை தருவதாகும்.

அந்தணப் பெருமக்களால் வாத்தியார் என்று அழைக்கப்பட்ட வணக்கத்துக்கும் போற்றுதலுக்குமுரிய மகாதேவக் குருக்கள் அந்தண சிவாச்சாரியர்களின் குருவாக விளங்கியவர்.

இன்று நம் மண்ணில் வேதம் ஓதி, யாகம் வளர்த்து அறம் காக்கின்ற அந்தணச் சிவாச்சாரியர்களில் பெரும்பாலானவர்கள் சிவஸ்ரீ மகாதேவக் குருக்களின் குருகுலத்தில் கற்றுத் தேர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வேதம், ஆகமம், உபநிடதங்களில் மிகச் சிறந்த பாண்டித்தியமுடைய குருக்கள் அவர்கள்; வேதியர்களுக்குரிய அறத்தை வழுவாது கடைப்பிடித்த தவசிரேஷ்டர்.

இணுவில் மண்ணில் காயத்திரி பீடம் தர்ம சாஸ்தா குருபீடத்தை நிறுவி, அங்கு அந்தண மாணவர்களுக்கு வேதங்களையும் ஆகமங்களையும் ஐயம் தெளிவுறக் கற்பித்த பெருந்தகை.

ஒரு காலத்தில் வேதமந்திரங்களில் நிபுணத்துவம் பெற்ற அந்தணர்கள் இந்தியாவில் இருந்து இங்கு வரவழைக்கப்பட்டனர்.

ஆனால் வாத்தியார் மகாதேவக் குருக்கள் வேதாகம குருகுலத்தை ஆரம்பித்து அங்கு சமஸ்கிருத மந்திரங்களைக் கற்பித்து வந்ததன் காரணமாக தகைசான்ற அந்தணச் சிவாச்சாரியர்கள் இங்கு உருவாகினர்.

ஆம், எங்கள் ஈழத் திருநாட்டில் வேத, ஆகமங்களில் விற்பன்னர்களாகத் திகழுகின்ற அந்தணக் குருமார்கள் சிவஸ்ரீ மகாதேவக் குருக்களின் மாணவர்கள் எனும் போது அவரின் பேராற்றல் எத்துணை என்பது உணர்தற்குரியது.

வேதமந்திரங்களைக் கற்பிப்பது மட்டுமன்றி; ஆலய மகோற்சவங்கள், கும்பாபிசேகங்கள் உள்ளிட்ட கிரியைகளை நெறிப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் மகாதேவக் குருக்கள் ஆற்றிய வகிபங்கை எங்கள் சைவ மண் ஒருபோதும் மறந்துவிட முடியாது.

உண்மையில் வேதமந்திரங்களின் உச்சாடணம், அவற்றை மனனம் செய்து ஒப்புவித்தல் என்பன சாதாரணமான விடயமன்று.

தவிர ஆலய அமைப்புகள், கிரியை ஒழுங்கு முறைகள் என்பனவும் ஆகம சாத்திர முறைப்படி செய்ய வேண்டியவை.

அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துகின்ற பேராற்றல் கொண்ட மகாதேவக் குருக்கள் இறைவழிபாட்டினூடாக ஆன்ம பலத்தை எம் மண்ணுக்கும் எம் மக்களுக்கும் வழங்கிய உத்தமர்.

அவரின் சேவையைப் பாராட்டி தமிழகத்தின் தருமை ஆதீனம் சிவாகம கலாநிதி எனும் தகைசால் கௌரவத்தையும் யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு யாழ் விருதையும் வழங்கிக் கௌரவித்தன.

88 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து அறப்பணியும் ஆன்மீகப் பணியும் ஆற்றிய எங்கள் மகாதேவக் குருக்களின் குருவருள் என்றும் எங்களுக்குக் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

---

### அரசமட்டப் பேச்சுவார்த்தை மூலம்

# இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு எட்டவேண்டும்

### வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சனையை தீர்ப்பதற்கு அரசமட்டப் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டவேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னராசா தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் சங்கத் தலைவர்களுக்கிடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தை வவுனியா ஹொறவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

2016ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இன்றுவரை நடைமுறைப்படுத்தாமையினால் தமிழ்நாட்டிலும் வடமாகாணத்திலும் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே கடந்த 9 வருடங்களாக நடவடிக்கை மேற்கொள்ளாததையிட்டு இரு நாட்டு மீனவர்களும் 9 வருடங்களுக்குப் பின்பு கலந்துரையாடியுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மூலம் நாம் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

இரு நாட்டிலும் பாதிக்கப்படுவது மீனவர்களே. எனவே இதனைத் தீர்க்க வேண்டிய அவசியத்தினையும் அதற்கான பொறிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளோம்.

இதன் அடுத்த கட்டமாக இலங்கையின் கடற்றொழில் அமைச்சரும் அதிகாரிகளும் அதே போன்று இந்தியப் பிரதமர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோர் இந்தப் பிரச்சினையை அரசமட்டப் பேச்சுவார்த்தையாகக் கொண்டு சென்று அதனூடாக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை இரு அரசாங்கங்களுக்கும் வலியுறுத்தி முன்வைக்கிறோம் என்றார். *(ம-7,250)*

---

## மானிப்பாயைச் சேர்ந்தவர் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் வீடொன்றில் இருந்து யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த 71 வயதுடைய செல்லத்துரை கெங்காதரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த ஒருமாதத்திற்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் இருந்து மட்டக்களப்பு மாமாங்கம் 6ஆம் குறுக்கு வீதியிலுள்ள வீடு ஒன்றில் வந்து தங்கியுள்ள நிலையில், நேற்று முன்தினம் படுக்கையறையில் இரவு நித்திரைக்குச் சென்றவர் அதிகாலையில் நித்திரையிலிருந்து எழும்பாத நிலையில் அவரை எழுப்ப முற்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த சடலத்தை நீதிமன்ற அனுமதியைப் பெற்று பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

---

# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு

### அமைச்சரவை அனுமதி

2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


நிதி அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கமைய சம்பளக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் உள்ளடங்கிய சுற்றறிக்கையின் மூலமான ஆலோசனைகளை வெளியிடுதல் தொடர்பான யோசனைக்கே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)

## சாதனையாளர்களாக வலம் வரும் தனுசு இராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும் ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும் பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**தனுசு:** மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களைச் செய்யாத தனுசு இராசி நேயர்களே! நீங்கள் வானத்தில் கோட்டை கட்டுபவர்கள். பிறருக்குக் கொடுத்துக் கொடுத்தே மகிழ்ச்சியடைவீர்கள். பொதுவாக நீங்கள் சாதுவானவர். சாதனையாளர்களாக வலம் வந்து மற்றவர்களுக்குப் பயன் தருபவர்கள். இந்தச் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

**கிரகநிலை:** இதுவரை உங்களது இலாப ஸ்தானத்தில் இருந்த சனி பகவான் இனி உங்களது அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். அவர் தனது ஏழாம் பார்வையாக உங்களது ரண ருண ரோக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையாக உங்களது பாக்கிய ஸ்தானத்தையும், தனது மூன்றாம் பார்வையாக உங்களது தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** எதிலும் நிதானமாகவும் சிறப்பாகவும் செயற்படுவர். சூழ்நிலைக்கு ஏற்றவாறு பேசி, காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்கள் நடக்கும். பூர்வீகச் சொத்துக்கள், சிரமமில்லாமல் கை வந்து சேரும். ஆலயத் திருப்பணிகளிலும், தர்ம காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். வருமானம், எதிர்பார்ப்பிற்கும் அதிகமாகக் கிடைக்கும். தேக ஆரோக்கியம் சீராக இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்களின் நட்பும் ஆதரவும் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் நல்ல செய்திகள் உங்களின் செவிகளைக் குளிர்விக்கும் ஆதாயமும் நல்கும்.

உங்களின் சுய முயற்சியின் அடிப்படையில் செயற்கரிய காரியங்களைச் செய்வீர்கள். உங்களால் சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை உண்டாகும். எதிலும் விவேகத்துடன் செயற்படுவீர்கள். உங்களின் கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மீது சுமத்தப்பட்ட வீண் பழிகளில் இருந்தும் வழக்குகளில் இருந்தும் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விடுபடுவீர்கள், அதற்கான இழப்பீடுகளும் கிடைக்கும்.

புத்தி தெளிவுடன் சனி பகவான் சில சந்தர்ப்பங்களில் அவசர புத்தியைக் கொடுப்பார். எதிர்பாராத விதத்தில் தீயவர்களின் தொடர்பும் ஏற்படும். இதற்காக அஞ்சத் தேவையில்லை. நீங்கள் ஓய்வெடுக்காமல் உழைத்துக்கொண்டே இருப்பீர்கள். அதனால் நற்பலன்களும் உள்ளன. செய்தொழிலில் தினமும் வருமானம் வந்துகொண்டே இருக்கும். சிலருக்குப் புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். மற்றவர்களைத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் அளவிற்கு உயர்வீர்கள். கல்வி, கேள்விகளில் அரிய சாதனைகள் புரிய வாய்ப்புக் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வத்தோடு செல்வாக்கும் உயரும். எதிர்பாராத இடங்களிலிருந்து தக்க உதவிகளைப் பெறுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும். பேச்சில் வசீகரமும், நடையில் கம்பீரமும் ஏற்படும். தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட மனம் விழையும். உங்களின் செயல்களை முறைப்படுத்திச் செய்வீர்கள்.

உத்தியோகத்தர்கள், அனைத்து வேலைகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். பதவி உயர்வு பெறுவதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். சக ஊழியர்களுக்கும் உதவி செய்வீர்கள். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் அனுகூலமான பலன்களைக் காண்பீர்கள். கூட்டாளிகளை அரவணைத்துச் சென்று காரியங்களைச் செய்யவும். புதிய சந்தைகளை நாடிச் செல்லும்போது கவனமாக இருக்கவும். அரசு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்.




அரசியல்வாதிகளைத் தேடிப் புதிய பதவிகள் வரும். செய்கின்ற காரியங்களில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகவே அமையும். பொதுநலனோடு இணைந்த சமுதாய நலன் சார்ந்த எண்ணங்களைச் செயற்படுத்த முனைவீர்கள். தொண்டர்களை அரவணைத்துச் சென்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். மறைமுக எதிர்ப்புகள் அகலும்.

கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஆனாலும் உங்கள் சுய கௌரவத்துக்கு பங்கம் ஏற்படாது. சககலைஞர்களின் உதவியால் உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

பெண்கள், குடும்பத்தில் அனுகூலமான சூழ்நிலையைக் காண்பீர்கள். உங்கள் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள். இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். பெரியோரின் ஆலோசனைப்படி நடந்துகொண்டு, குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டாலும் தப்பித்துக்கொள்வீர்கள்.

மாணவர்கள், படிப்பில் சிறப்பான கவனம் செலுத்துவீர்கள். பாடங்களை முன்னதாகவே படித்து முடித்து, ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த மதிப்பெண்களை பெறுவீர்கள். விளையாட்டுகளில் புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். பெற்றோர்கள் உங்களுக்குப் பக்க பலமாக இருப்பதால் முயற்சிகளைத் தீவிரப்படுத்தலாம்.

**மூலம்:** வேளை தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் இலாபம் குறையாமல் இருக்கும். புதிய ஓடர்கள் கிடைப்பது தாமதப்படும்.

**பூராடம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் உங்களுடன் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும். பிள்ளைகள் விடயத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** அயலவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சாமர்த்திய மான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணம், காசுகள் சேரும். மற்றவர்கள் செய்ய தயங்கும் வேலையை செய்து முடித்து பாராட்டு கிடைக்கப்பெறுவீர்கள்.

**பரிகாரம்:** முடிந்த போதெல்லாம் அல்லது வியாழக்கிழமைகளில் மட்டுமாவது குருவை வழிபடவும். ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் சொல்வது நன்மையைத் தரும். துளசி இலையை பெருமாளுக்கு வியாழன் தோறும் அர்ப்பணித்து வணங்கிவர அவரின் அருள் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

கடந்த 16ஆம் திகதி பூப்புனித நீராட்டு விழா ஒன்றிற்குச் சென்று விட்டு பிற்பகல் வேலணை பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் வேலணை - மண்கும்பான் வீதியைக் கடந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது.

இதில் படுகாயமடைந்த குறித்த குடும்பஸ்தர் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை(26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வாகனம்...

கொண்டு சென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் முழங்காவில் 31ஆம் கட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான கமல் நகுலமலர் (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (25) இரவு ஏழு முப்பது மணி அளவில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மகளை அழைத்துக்கொண்டு முழங்காவில் வீதியின் இடப்பக்கமாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த மகேந்திரா வாகனம் அவரை மோதித் தள்ளியது. சாரதி முழங்காவில் பொலிஸில் சரணடைந்தார்.

இதில் படுகாயமடைந்த குறித்த குடும்பப் பெண் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அன்றிரவே உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கோப்பாயில்...

முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.-பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக உள்ள வாய்க்காலில் எழுவது வயது மதிக்கத்தக்க இனம்தெரியாத நபர் ஒருவரின் சடலம் காணப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டதுடன் ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் சடலமாக மீட்கப்பட்டவர் அப்பிரதேசத்தைச் சார்ந்தவரல்ல என்பது தெரியவந்துள்ளது.

மேலும் சடலத்துடன் மீட்கப்பட்ட உடைமைகளின் அடிப்படையில் குறித்த நபர் யாசகராக இருக்கக்கூடும் எனவும் யாசகம் பெறும் நோக்கில் குறித்த பிரதேசத்துக்கு வருகை தந்திருக்கக்கூடும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மரணித்தவரது விபரங்கள், மரணத்துக்கான காரணம் எதுவும் உறுதிப்படுத்த முடியாமையினால் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் பாரப்படுத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## இழுவலைகளை...

காண வேண்டி இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வந்து 5 பேர் கொண்ட குழுவாக நான்கு மாவட்ட இலங்கை மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் எங்கள் தொப்புள் கொடி உறவுகளுடன் எமது நிறைகுறைகளைப் பேசி மகிழ்ந்தோம். அவர்களுடைய கஷ்ர நிலைகளை எங்களிடம் கூறினார்கள். எங்களுடைய கஷ்ர நிலைமைகளையும் நாங்கள் கூறினோம்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தை இருந்தது. சுமுகமாக நடைபெற ஏற்பாடு செய்த இலங்கை மீனவ சமாசத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

கடந்த 9 வருடங்களுக்கு முன் இரண்டு அரசாங்கங்களும் பேசிய பின் மீனவர் பிரச்சினை பேசப்படவில்லை. 9 வருடங்களில் இரண்டு நாட்டு மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பாதிப்பை எவ்வாறு நிறுத்துவது என்று பேசி[illegible] அவர்களுடைய கோரிக்கை இந்திய இழுவலைகளை முற்றாக நிறுத்த வேண்டும். அதனை நிறுத்தினால் கடல்வளம் பாதுகாக்கப்படும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

நாங்கள் இந்த இழுவலையை படிப்படியாகக் குறைப்பதற்கு இந்திய மற்றும் தமிழக அரசாங்கம் ஊடாக சம்மதிக்கின்றோம் எனக் கூறினோம். அடுத்த கட்டமாக ஏனைய மாவட்ட மீனவ அமைப்புக்களையும் ஒன்று திரட்டி இந்திய அரசு, தமிழக அரசு, இலங்கை அரசாங்கம் உதவியுடன் இதனைப் பேசி நல்லதொரு தீர்வை அடுத்த கட்டமாக எட்ட முடியும் எனப் பேசியுள்ளோம்.

வயிற்றுப் பிழைப்புக்காக மீன் பிடிக்கும் மீனவர்களை இலங்கை அரசாங்கம் தமது சட்டத்தின்படி 6 மாதம், ஒரு வருடம், 2 வருடம் என சிறை வைத்துள்ளார்கள். அந்த மீனவர்களை மனிதாபிமான முறையில் விடுவிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாகவும் தீர்வு காண வேண்டும் எனக் கோரியுள்ளோம்.

அடுத்த கட்ட பேச்சுவார்த்தையின்போது அதனைச் செய்யலாம் என இலங்கை மீனவர்கள் கூறியுள்ளார்கள். நிச்சயமாக இலங்கை, இந்திய அரசாங்கங்கள் பேசி இதற்கு ஒரு தீர்வை எட்ட வேண்டும் என்றார். (ம-7,250)

## உள்...

பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் எண்ட்ரூ பேட்ரிக்கிடம் நேற்று அறிவிக்கும் போதே வெளியுறவு அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

"இலங்கை உள்நாட்டுப் போரின் போது செய்யப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக ஐக்கிய இராச்சியத்தின் தடைகள்" என்ற தலைப்பில் 2025 மார்ச் 24 அன்று ஐக்கிய இராச்சியத்தின் வெளியுறவு, பொதுநலவாய அமைப்பு மற்றும் அபிவிருத்தி அலுவலகம் வெளியிட்ட ஊடக அறிக்கை, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, ஐக்கிய இராச்சிய அரசாங்கம் நான்கு நபர்கள் மீது தடைகளை விதித்துள்ளதுடன், அவர்களில் மூன்று பேர் இலங்கை ஆயுதப்படைகளின் முன்னாள் பிரதானிகள் ஆவர்.

"சம்பந்தப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான அந்நாட்டில் உள்ள சொத்துக்களை முடக்குவது மற்றும் அவர்கள் நாட்டிற்குள் நுழைவதைத் தடை செய்வது உள்ளிட்ட இந்தத் தடைகள், ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட ஒருதலைப்பட்ச நடவடிக்கை என்பதை வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் வலியுறுத்துகிறது."

நாடுகளால் எடுக்கப்படும் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கை, இலங்கையில் உள்நாட்டு நல்லிணக்க செயல்முறைக்கு எந்த ஆதரவையும் வழங்காது என்பதுடன், நிலைமையை மேலும் குழப்பமடையச் செய்வதே நோக்கமாகும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.03.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5787 — S 7 9 4 6 8 0
அத சம்பத — S 4 6 8 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0362

தன நிதானய — திகதி - 2025.03.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1817 — N 19 22 60 67 N — 88691

மெகா பவர் — திகதி 26/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2135 — R 14 29 37 62 79

ஜய — திகதி 2025.03.26 — சீட்டிழுப்பு இலக்கம் 055 — E 5 8 2 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4029 — சீட்டிழுப்பு திகதி 26.03.2025 — M 15 16 47 52 — M

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1096 — மீனம் 04 06 27 39 மீனம் — 08067 — 23

உத்தியோகபூர்வ முடிவுகள் — 26.03.2025 — வெற்றி வாரம் 495 — L — 7 0 3 0 1 0 — 53782 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,324,154.00

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2761 — சீட்டிழுப்பு திகதி 2025.03.26 — தினம் புதன்கிழமை — 03 08 37 60 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,343,684.80

சனிதா — திகதி 26.03.2025 — வெற்றி வாரம் 4922 — 02 20 26 34 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,351,250.00 — 54464

ஜயோதா — திகதி 2025.03.26 — வெற்றி வாரம் 2115 — 20 27 45 67 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,613,876.40

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4473 — சீட்டிழுப்பு திகதி 26.03.2025 — தினம் புதன்கிழமை — 17 21 40 49 — ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,555,122.80 — 105146

கப்றுக — 1937 — 26.03.2025 புதன்கிழமை — O 34 18 59 68 72 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,823,323.20

அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 2587 — சீட்டிழுப்பு திகதி 2025.03.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,088,592.80 — 14 15 34 36 S — 818917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2550)

076 825 7716 (ஆகாஸ்)



**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

**தொழில்நுட்பப் பிரிவு**

**A/L 2027**

ஆரம்பம் : 30.03.2025
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு : 077 0175 346 (C-2544)



**தேவை**

பாவித்த 3 சில்லு ஸ்கூட்டி வாகனம் தேவைப்படுகிறது. விற்பனைக்கு வைத்திருப்போர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (3759)

077 431 8419



**விற்பனைக்கு**

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் ஆறு பரப்பு சுற்று மதிலுடன் காணியும்.
- யாழ். பலாலி வீதியில் வசந்தன் பாமசிக்கு அண்மையில் 6 பரப்புக் காணி சுற்று மதிலுடன்
- யாழ். கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் கட்டடமும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
0777 232 535 (C-2553)


## சதொச தொடர்ந்து செயற்பட அமைச்சரவை அனுமதி

கடந்த அரசாங்கத்தினால் கலைப்பதற்குத் திட்டமிடப் பட்டிருந்த சதொச எனப்படும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சதொச நிறுவனத்தைக் கலைப்பதற்கு 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2 ஆம் திகதியன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும் சந்தை நடவடிக்கைகளில் சதொச நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதனால் சதொசவை தொடர்ந்து நடத்த அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.(ம-7)


**விற்பனைக்கு**

ஓடுகள், தீராந்திகள், இரும்புக்கதவுகள், சாதாரணகேற், நிலை, கதவுகள், கட்டிடஇடிபாடுகள் உடன் விற்பனைக்குண்டு. (C-2552)

077 723 2535



**DCM** - யாழ். நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2027**
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் - 06.04.2025 (ஞாயிறு) 9.00 Am
நிர்வாகம் : 077 778 9815
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (C-2547)



**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2551)



**A/L ICT** வகுப்புக்கள் திரு.இ.குமரன்

**A/L 2027 ஆரம்பம்**
ஞாயிற்றுக்கிழமை 30.03.2025 5 pm

திரு.இ.குமரன் **A/L ICT**
100% Practical-Oriented Class
Mr.R.Kumaran-B.Sc.

Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers
Revision

ICT துறையில் 23 வருட கற்பித்தல் அனுபவம்
MIS ICT COLLEGE TP:0776577359,#74, Sabapathy Lane, Jaffna. தலையாழி, பிரம்படி (296)



**புகையிலை விற்பனைக்கு**

அறுவடைக்குத் தயாராக உள்ள பாணிப்புகையிலை (தோட்டு வெட்டு) 6500 கன்றுகள் விற்பனைக்கு. (996)

076 287 8157



# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA

## 2027 A/L கணித உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

**தமிழ்மொழி மூலம்**

PHYSICS
- திரு. G.பிரபா
- திரு. N.கபிலன்
- திரு. R.ராகுலன்

CHEMISTRY
- திரு. G.BENO
- திரு. V.K.நந்தா

BIOLOGY
- திரு. K.இராகவன்
- திரு. R.குகானந்தன்

COM.MATHS
- திரு. P. செந்தில்நாதன்
- திரு. V.S. சிவகரன்

**ENGLISH MEDIUM**

PHYSICS
- MR.M.KUGANESWARAN

CHEMISTRY
- MR.G.BENO

BIOLOGY
- MR.V.S.GUNASEELAN

COM.MATHS
- MR.P.SENTHILNATHAN
- MR.V.S.SIVAKARAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-2549)

ஆரம்பம் : 30.03.2025 (SUNDAY) 9.15 AM
நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்...

தொடர்புகளுக்கு : 076 566 3006, 076 569 3006, 077 791 7611
f https://facebook.com/New Science hall


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.